Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 31, 2022

வியாழக்கிழமை மார்ச் 31, 2022 | ஒளி: 07 கதிர்: 270 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## இ.தொ.கா தலைமை பதுளைக்கு பறந்தது

### ஏகமனதாக தெரிவானார் செந்தில்; புது பதவிகளும் உட்சேர்ப்பு



ஆ.ரமேஸ்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவராக, செந்தில் தொண்டமான் ஏகமனதாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதுடன், புதிய பதவிகள் உருவாக்கப்பட்டதுடன், புதிய முகங்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தலைவர் உள்ளிட்ட புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்காக, கொட்டகலையிலுள்ள சி.எல்.எப் மண்டபத்தில், காங்கிரஸின் தேசிய சபை காலை 10 மணிக்கு கூடியது.

இதில், நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, பண்டாரவளை, இரத்தினபுரி,

தொடர்ச்சி P2

## இரண்டு நாள் விடுமுறை?

இன்று (31) காலை 8 மணி முதல் நள்ளிரவு வரை நாடளாவிய ரீதியில் 10 மணித்தியாலங்கள் மின்வெட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை சமாளிக்க இரண்டு நாள் விடுமுறையை அறிவிக்குமாறு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளதாக அறியமுடிகின்றது.

## இ.தொ.கா நிர்வாக குழுவின் விவரம்

ஆ.ரமேஸ்.



1) தலைவர் - செந்தில் தொண்டமான்
2) பொதுச்செயலாளர்- ஜீவன் தொண்டமான்
3) தவிசாளர்- எம்.ரமேஸ்வரன்,
4) பிரதி தவிசாளர்- பி.ராஜதுரை.

தொடர்ச்சி P2




உறுப்பு நாடுகளுக்கு இடையேயான மேம்பட்ட ஒத்துழைப்பு

## "மீட்சிக்கு மட்டுமன்றி செழுமைக்கும் முக்கியம்"

உறுப்பு நாடுகளுக்கிடையேயான மேம்பட்ட ஒத்துழைப்பு பொருளாதார மீட்சிக்கு மட்டுமல்ல, அதிகரித்த பொருளாதார செழுமைக்கும், சிறந்த பொது சுகாதாரத்திற்கும், நீண்டகாலத்தில் மேம்பட்ட பிராந்திய செழுமைக்கும் அவசியமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# நாடு முடங்கும் அபாயம்

சில நாள்களேனும் நாட்டை முழுமையாக மூடிவிடுமாறு அரசாங்கத்திடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

எரிபொருள் தட்டுப்பாட்டால், மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாத நிலைமையும், மின் வெட்டால், வர்த்தக நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்க முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் பல தொழில்துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆகையால் சில நாள்களேனும் நாட்டை முழுமையாக மூடிவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்திடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலைகளின்

## "கட்டமைப்பு பாதிக்க இடமளிக்கப்படாது"

நதீகதயா பண்டார



பொருளாதார நெருக்கடி நிலைமை காணப்பட்டாலும் வைத்தியசாலை கட்டமைப்பு பாதிப்படைய இடமளிக்கப்படாதென தெரிவித்த சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, அத்தியாவசிய சேவைகளுக்கு முக்கியதுவம் வழங்கப்பட

தொடர்ச்சி P2



கொழும்பில் மே தினம்:

## 11 பங்காளிகள் தீர்மானம்



அரசாங்கத்தின் அதிகாரத்தை இல்லாதொழிப்பதை மையமாகக் கொண்டு, அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 11 பங்காளிக் கட்சிகள் மே தின பேரணியை கொழும்பில் நடத்த தீர்மானித்துள்ளன.

தொடர்ச்சி P2




## பகிரங்கமாக மன்னிப்பு கோரினார் நாமல்

பொதுமக்களுக்கு ஏற்பட்ட அனைத்து அசௌகரியங்களுக்கும் மன்னிப்பு கோருவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, நேற்று (30) அறிவித்தார்.

வெலிமடையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் வரிசையில் நின்றிருந்த சிலர், அமைச்சரின் வருகை காரணமாக கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியதாக இணையத்தில் பகிரப்பட்ட காணொளிக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சிறுபான்மையினருக்கு

## உத்தரவாதம் வழங்க அரசாங்கம் தவறிவிட்டது

### ஜெய்சங்கரிடம் ஹக்கீம் எடுத்துரைப்பு

13ஆவது திருத்தத்தைப் பொறுத்தவரை, எதிர்காலம் குறித்து சிறுபான்மைச் சமூகங்களுக்கு நம்பிக்கை ஏற்படுகின்ற விதத்தில் இந்த அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டு, உரிய உத்தரவாதங்களை வழங்கத் தவறிவிட்டது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரிடம் கூறினார்.

தொடர்ச்சி P2





80 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் தொகையினர் பூஸ்டர் தடுப்பூசி டோஸை பெறும் பட்சத்தில், முகக்கவசத்தை கட்டாயம் அணியும் நடைமுறையை நீக்குவது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன, இதுவரை 53-54 சதவீதமான மக்கள் மட்டுமே பூஸ்டர் தடுப்பூசி

தொடர்ச்சி P2

## அடுத்தவாரம் முதல் அரை நாள் மின்வெட்டு?

### இன்று 13 மணிநேரம் மின்வெட்டு



நாட்டில் நேற்றையதினம் (30) பத்து மணிநேர மின்வெட்டு அமல்படுத்தப்பட்டிருந்த நிலையில் அடுத்த வாரம் முதல் ஒரு நாளைக்கு 10 மணித்தியாலங்களுக்கு மேல் மின்வெட்டு அமல்படுத்தப்படக் கூடும் என்று இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2





அத்தியாவசிய சேவைகள் மற்றும் மின் உற்பத்திக்காக இந்திய எண்ணெய் நிறுவனத்திடம் (ஐ.ஓ.சி) இருந்து 6,000 மெற்றிக் தொன் டீசலை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே, நேற்று (30) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மருந்து தட்டுப்பாட்டால்

## பிரதான வைத்தியசாலைகள் இரண்டின் சேவைகள் முடங்கின



கொழும்பு தேசிய வைத்தியசாலையின் ஆய்வுகூட சேவையை மட்டுப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள அதேவேளை, மருந்து தட்டுப்பாடு காரணமாக, காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையும் நேற்று (30) முதல் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தாத சத்திரசிகிச்சைகளை இடைநிறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

## தங்கத்தை பிடிக்க முடியாது



24 கரட் தங்கப் பவுணின் விலை 200,000 ரூபாயாக நேற்றையதினம் (30) உயர்ந்துள்ளதாக கொழும்பு செட்டியார் வீதியிலுள்ள தங்க வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

## சகல மனுக்களும் தள்ளுபடி

பொது இடங்களுக்குள் நுழைய முழு தடுப்பூசி போடுவது கட்டாயம் என்ற வர்த்தமானியை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களையும் உயர்நீதிமன்றம், நேற்று (30) தள்ளுபடி செய்தது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# இ.தொ.கா தலைமை பதுளைக்கு பறந்தது

கேகாலை மற்றும் கொழும்பு உட்பட பல பிரதேசங்களில் இ.தொ. காங்கிரஸின் தேசிய சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

காங்கிரஸின் தற்போதைய பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் குமாரவேல் தொண்டமான் தலைமையில் சபை கூடியது. முதலாவதாக, புதிய பொது செயலாளர் பதவிக்கான தெரிவு இடம்பெற்றது.

எனினும், தற்போதைய பொதுச் செயலாளர் ஜீவன் குமாரவேல் தொண்டமான், அரசியல் ரீதியாகவும் தொழிற்சங்க ரீதியாகவும் பொது செயலாளராக தொடர்ந்து செயற்பட ஏகமானதான அங்கிகாரத்தை தேசிய சபை வழங்கியது.

அதன்பின்னர், தலைவருக்கான தெரிவு இடம்பெற்றது. காங்கிரஸின் நிதி காரியதரிசியான மருதுபாண்டி ராமேஸ்வரன் எம்.பி, காங்கிரஸின் உப தலைவர்களில் ஒருவரான செந்தில் தொண்டமான் ஆகியோர் போட்டியிட்டனர்.

இவ்விருவருக்கும் இடையில் கடுமையான போட்டி, நிலவியதாக அறியமுடிகின்றது. எனினும், வாக்கெடுப்பின்றி, தேசிய சபையின் அங்கிகாரத்துடன், செந்தில் தொண்டமான், காங்கிரஸின் புதிய தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

அதேசமயம், காங்கிரஸில் தவிசாளர் பதவியொன்று புதிதாக உருவாக்கப்பட்டது. காங்கிரஸின், தவிசாளராகவும், நிதி காரியதரிசியாகவும் மருதுபாண்டி ராமேஸ்வரன் ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் போஷகர்களாக எஸ்.ஜெகதீஸ்வரன், எஸ்.சிவராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல, கட்சியின் உப தலைவர்கள், தேசிய அமைப்பாளர், பிரதி தேசிய அமைப்பாளர், பிரதி தவிசாளர், 30 பேர் கொண்ட உதவி செயலாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், அவருக்குப் பின்னர் பொறுப்பேற்றுக்கொண்ட அமரர் ஆறுமுகன் தொண்டமான், இடையில் தலைவர் பதவியை வகித்த முத்து சிவலிங்கம் ஆகியோர், தங்களுடைய அரசியல் பயணத்தை நுவரெலியா மாவட்டத்தில் இருந்தே ஆரம்பித்தனர்.

புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் செந்தில் தொண்டமான், தனது அரசியல் பயணத்தை பதுளை மாவட்டத்தில் ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இ.தொ.கா நிர்வாக குழுவின் விபரம்

தேசிய அமைப்பாளர்- எ.பி.சக்திவேல், பிரதி பொது செயலாளர்- எஸ்.செல்லமுத்து, போசகர்கள் எஸ். ஜெகதீஸ்வரன், எஸ்.சிவராஜா, பிரதி தலைவர்கள் கணபதி கனகராஜ், அனுஷா சிவராஜா

உப தலைவர்கள் வேலு யோகராஜ், எஸ். செண்பகவள்ளி, எ.பிலிப்குமார், எம். சச்சுதானந்தன், எ.அசோக்குமார், பி.சிவலிங்கம்,எஸ். சிவஞானம்,ஆர். பாஸ்கரன்,பரத் அருள்சாமி, திருமதி மார்கட்மேரி, ராஜமணி, திருகேதீஸ் செல்லசாமி.

அரசியல் பிரிவு பிரதி அமைப்பாளர்- இராஜமணி பிரசாத் தொழிற்சங்க பிரிவு பிரதி அமைப்பாள்- பழனி சசிக்குமார்.

# “பொருளாதார மீட்சிக்கு...

பல துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான 5 ஆவது வங்காள விரிகுடா முன்முயற்சி (பிம்ஸ்டெக்) உச்சி மாநாட்டிற்கு மெய்நிகர் முறையில், நேற்று (30) தலைமை தாங்கினார்.

இந்த உச்சிமாநாட்டில் பங்களாதேஸ் பிரதமர் ஷேக் ஹசீனா, பூடான் பிரதமர் டொக்டர் லோடே ஷெரிங், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, நேபாள பிரதமர் ஷேர் பகதூர் தியூபா, தாய்லாந்து பிரதமர் ஜெனரல் பிரயுத் சான்-ஓ-சா (ஓய்வு பெற்றவர்) மற்றும் பலர் இணைய வழியில் கலந்து கொண்டனர். மியன்மாரின் வெளியுறவு அமைச்சர் வுன்னா மவுங் ல்வினும் இணைய வழியில் உச்சிமாநாட்டில் இணைந்து கொண்டார்.

உச்சிமாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 1997ஆம் ஆண்டு பிம்ஸ்டெக் நிறுவப்பட்டதில் இருந்து, இந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் தமது அனுபவங்கள், பலம் மற்றும் நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கும் ஒரு முக்கிய தளமாக வளர்ந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

பிராந்தியத்திற்குள் மட்டுமன்றி, உலகளாவிய விவகாரங்களில் ஆசியாவின் உந்து சக்தியாகவும் அமைப்பின் பங்கை அதிகரிப்பதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியாகவும் இருக்கும் என ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள பிம்ஸ்டெக் பிராந்தியத்துக்குள் வர்த்தகம் மற்றும் முதலீடுகளின் முக்கியத்துவத்தை இலங்கை ஜனாதிபதி எடுத்துரைத்ததோடு, வங்காள விரிகுடாவில் உள்ள வளங்கள் சமமாகப் பாதுகாக்கப்பட்டு, முறையாக நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார். கடலோர சமூகங்களின் வாழ்வாதாரத்தை அச்சுறுத்தும் கட்டுப்பாடுகளற்ற, முறைப்பாடளிக்கப்படாத மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகள் மற்றும் அதிகமாக மீன்பிடிப்பதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை கூட்டாக நிறுவுவதற்காக அவர் அழைப்பு விடுத்தார்.

# பகிரங்கமாக மன்னிப்பு...

வெலிமடையில் எந்த நிகழ்விலும் தான் கலந்துகொள்ள திட்டமிடவில்லை என்றும் இது ஒரு தவறான புரிதல் மற்றும் தனது பெயரில் பரவிய வதந்திஎன்றும் தனது டுவிட்ட பதிவில் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் அப்பகுதிக்கு வருவதாக தகவல் வெளியானதையடுத்து, வாகனங்கள் உட்பட வரிசையில் நின்ற பொதுமக்கள் வேறு வீதிக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து, அமைச்சர் நாமலுக்கு எதிராகக் கொதித்தெழுந்த மக்கள், நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து அரசாங்கத்தையும் கண்டித்துள்ளனர்.

இதனையடுத்தே, பாதிக்கப்பட்ட மக்களிடம் மன்னிப்புக் கோருவதாகவும் இந்த கடினமான காலத்திலிருந்து மீண்டு வருவோம் எனவும் டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

# பங்காளிகள் தீர்மானம்

அதற்கமைய, 11 பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட ஏனைய கட்சிகளுக்கு மே தின பேரணியில் இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

மேதின பேரணியில் பெருமளவிலான மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் நாடு எதிர்நோக்கும் சிரமங்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனவும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பங்காளிக் கட்சிகளுக்கு இடையில், நேற்று முன்தினம் (29) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்ச மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள் பொதுக் குரலை உருவாக்கி, பாராளுமன்றத்துக்குள் அதிகார அமைப்பில் மாற்றத்தை அமுல்படுத்த வேண்டும் எனவும் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு தற்போது நம்பிக்கை குறைந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

நிலவும் நெருக்கடியை சமாளிக்க அரசியல் கட்சிகள் யோசனைகளை முன்னமொழிந்துள்ள போதும் அதற்கு அரசாங்கம் இன்னும் பதிலளிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

# “கட்டமைப்பு பாதிக்க இடமளிக்கப்படாது”

வேண்டுமென ஜனாதிபதி, தனக்கு ஆலோசனை வழங்கியமைக்கு அமைய, சுகாதார சேவை முழுமையாக முன்னெடுக்கப்படும் என்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நேற்று (30) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்து தெரிவித்த அவர், இந்திய கடன் வசதியில் 80 சதவீதமான நிதி சுகாதார சேவைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதென தெரிவித்த அவர், அதற்கமைய 80 மில்லியன் ரூபாய் சுகாதார சேவைக்காக கிடைக்கப் பெற்றுள்ளது என்றார்.

தற்போது கிளினிக்குகள் மற்றும் சத்திரசிகிச்சை என்பவற்றின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சில வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள சில தாமதங்கள் எதிர்வரும் சில நாள்களில் நிவர்த்தி செய்யப்படும் என்றார்.

வைத்தியசாலை செயற்பாடுகள் செயலிழந்துள்ளமை தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளியான தகவல்கள் குறித்து தான் அறியவில்லை என தெரிவித்த அவர், எனினும் சிக்கல்கள் சில மணிநேரங்களுக்குள் சீர்செய்யப்பட்டன என்றார்.

# உத்தரவாதம் வழங்க அரசாங்கம் தவறிவிட்டது

> தமிழ்பேசும் மக்கள் என்ற வார்த்தைப் பிரயோகம் தமிழ், முஸ்லிம்களை உள்வாங்கும் விடயமாகும். உத்தியோகபூர்வ அறிக்கைகளில், தமிழ்பேசும் மக்கள் என்ற வார்த்தைப் பிரயோகத்தை கையாள்வதற்கான முஸ்லிம் தரப்பின் கருத்தை இந்திய தரப்பினர் அங்கிகரித்தனர்

இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான சந்திப்பு செவ்வாய்கிழமை (29) நடைபெற்றபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அத்துடன், தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடிப்புச் செய்யும் விவகாரமும் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார்.

அதிகாரப் பகிர்வுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

தமிழ்பேசும் மக்கள் என்ற வார்த்தைப் பிரயோகம் தமிழ், முஸ்லிம்களை உள்வாங்கும் விடயமாகும். உத்தியோகபூர்வ அறிக்கைகளில், தமிழ்பேசும் மக்கள் என்ற வார்த்தைப் பிரயோகத்தை கையாள்வதற்கான முஸ்லிம் தரப்பின் கருத்தை இந்திய தரப்பினர் அங்கிகரித்தனர்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்டபோது, முஸ்லிம்களின் அபிலாஷைகள் குறித்த விவகாரங்களில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழர் தரப்பின் பிரச்சினைகள் குறித்து ஆழமான புரிந்துணர்வுடன் செயற்பட்ட அதேவேளை, தமதுகட்சி முஸ்லிம் சமூகத்தின் விவகாரங்களில் அக்கறையுடன் மிகவும் நிதானமாக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதையும் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

இந்திய உதவியுடன் அமுல்படுத்தப்படும் மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி திட்டங்களில் ஒலுவில் ,மூதூர் போன்ற துறைமுகங்களையும் உள்வாங்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது. இரு நாடுகளுக்கிடையிலான சமய, கலாசார விவகாரங்களில் சகல இனங்களும் இந்திய துணைக் கண்டத்துடனும், இலங்கையுடனும் தொடர்புபட்டு வளர்ச்சியடைந்துள்ளன. இதனை மேம்படுத்துவதற்கு சகல சமயங்களையும் உள்ளடக்கிய பயனுள்ள தொடர்பாடல் பொறிமுறையொன்றை இந்தியா முன்னெடுக்கும் என இதன்போது நம்பிக்கை வெளியிடப்பட்டது. இச்சந்திப்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, உட்பட உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# அடுத்தவாரம் முதல் அரை நாள் மின்வெட்டு?

> மின்சாரத்தை சேமிக்கும் முயற்சியில் அரச ஊழியர்களை நேற்றும் இன்றும் வீட்டிலிருந்து பணியாற்றுமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு யோசனை தெரிவித்துள்ளது

மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருள் கிடைக்கப் பெறாவிட்டால், ஒரு நாளைக்கு 10 மணி நேரத்துக்கும் அதிகமாக மின்வெட்டு நீட்டிக்கப்படலாம் என்றும் வட்டாரங்கள் தெரிவித்தன.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்தின் பணிகள், செவ்வாய்க்கிழமை (29) முற்றாக நிறுத்தப்பட்டிருந்ததுடன், ஏனைய மின் உற்பத்தி நிலையங்கள் மூடப்படுவதைத் தடுக்க, எரிபொருளை அவசரமாக விநியோகிக்குமாறு மின்சாரசபை ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேவையான அளவு எரிபொருளை வழங்க எரிசக்தி அமைச்சு தவறினால், அடுத்த வாரம் முதல் 10 மணி நேரத்துக்கும் அதிக காலத்துக்கு மின்வெட்டு அமல்படுத்தப்படும் என்று அந்த வட்டாரங்கள் எச்சரித்தன.

இதேவேளை, மின்சாரத்தை சேமிக்கும் முயற்சியில் அரச ஊழியர்களை நேற்றும் இன்றும் வீட்டிலிருந்து பணியாற்றுமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு யோசனை தெரிவித்துள்ளது.

இதன்மூலம், மின்வெட்டு காலத்தை குறைந்தது இரண்டு அல்லது மூன்று மணிநேரங்களால் குறைக்க முடியும் எனவும் ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முகத்திலிருந்து கவசம்...

டோஸைப் பெற்றுள்ளனர் என்றும் இது திருப்திகரமாக இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

ஊடகங்களுக்கு நேற்று (30) கருத்துத் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், அதுவரை முகக்கவசத்தை அணிய வேண்டியது கட்டாயம் என்றும் குறிப்பிட்டார்.

ஒரு தடுப்பூசி டோஸைக் கூட பெறாத 20 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் எந்தவொரு வைத்தியசாலையிலோ அல்லது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலுலோ ஃபைசர் தடுப்பூசியைப் பெற முடியும் என்றும் தெரிவித்தார். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதே பூஸ்டர் டோஸின் நோக்கம் எனவும் கணிசமானோர் அதைப் பெறும் பட்டசத்தில், ஏனைய நாடுகளில் பின்பற்றப்படுவதைப் போன்று முகக்கவச விதிமுறைகளை நீக்கும் முறைமையை அமல்படுத்த முடியும் என்றார்.

இலங்கையைப் பொறுத்தவரை 3 தடுப்பூ டோஸ்களையும் பெற்றுக் கொண்டவர்களே முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்களாகக் கருதப்படுவர் என்றும் ஏப்ரல் 30ஆம் திகதிக்குப் பின்னர் முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட நபர்கள் மாத்திரமே பொது இடங்களுக்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்பதையும் நினைவூட்டினார்.

# ஐ.ஓ.சியிடமிருந்து டீசல் பெற முஸ்தீபு

இந்திய கடன் வசதியின் கீழ் டீசல் கொள்வனவு செய்யப்பட்ட கப்பல் இலங்கைக்கு வரும் வரை ஐ.ஓ.சி நிறுவனத்திடமிருந்து அரசாங்கம் டீசலை கொள்வனவு செய்யும் எனவும் குறிப்பிட்டார்.

டீசல் தொகுதியை ஏற்றிய கப்பல், இன்றையதினம் (31) இலங்கைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் பெறுவதற்காக நேற்றும் (30) இன்றும் (31) வரிசையில் நிற்க வேண்டாம் என பொதுமக்களிடம் அரசாங்கம், நேற்றுமுன்தினம் (29) வேண்டுகோள் விடுத்தது.

37,500 மெற்றிக் தொன் டீசலை கொண்டுவந்துள்ள கப்பலில் இருந்து திட்டமிட்டபடி டீசலை இறக்க முடியாமல் போனதே இதற்குக் காரணம் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

எனினும், அத்தியாவசிய சேவைகளுக்காக தொடர்ச்சியாக டீசல் விநியோகிக்கப்படும் என்றும், வழமைபோல பெற்றோல் விநியோகம் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பிரதான வைத்தியசாலைகள்....

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாடு காரணமாக, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அனைத்து ஆய்வக சேவைகளையும் மட்டுப்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரியால், சம்பந்தப்பட்ட பிரதானிக்கு கடிதம் மூலம் அறியப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் ஆய்வுகூட பரிசோதனைகளை சிக்கனமான முறையில் மேற்கொள்ளுமாறு தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உபகரணங்களின் கையிருப்பு குறைந்து வருவதால் ஆய்வுகூட நடவடிக்கைகளுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், அதனை இறக்குமதி செய்வதற்கு முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதிலும் உள்ள பல வைத்தியசாலைகளில், புற்றுநோய், இருதய, மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்காக பயன்படுத்தப்படும் மருந்துகள் தீர்ந்துள்ளதாகவும் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள், மேலும் பல மருந்துகள் தீர்ந்துபோகும் எனவும் அறியமுடிகிறது.

இதேவேளை, மருந்து தட்டுப்பாடு காரணமாக, காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையும் நேற்று (30) முதல் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தாத சத்திரசிகிச்சைகளை இடைநிறுத்தியுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.



# தங்கத்தை பிடிக்க முடியாது

24 கரட் தங்கத்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளதுடன், இலங்கை தங்க சந்தையில் 22 கரட் தங்கத்தின் விலை நேற்று (30) காலை வரை 185,000 ரூபாயாக அதிகரித்திருந்தாகவும் குறிப்பிட்டனர்.

அமெரிக்க டொலரின் மதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாலும், இறக்குமதிக்கான டொலர்கள் கிடைக்காதமையுமே இந்த நிலைக்கு காரணம் என வியாபாரிகள் மேலும் தெரிவித்தனர்.



பசில் தொடர்பான விடயங்கள் குறித்து

# வாய்திறந்தால் நாடு பற்றியெரியும்

இலங்கையில், இந்தியாவின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கே, இலங்கை கேட்கும்போதெல்லாம் இந்தியா கடன் வழங்குவதாகத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, லிட்றோ நிறுவனத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்‌ஷ தொடர்பில், எமக்குத் தெரிந்த விடயங்களை நாம் அம்பலப்படுத்தினால் நாடு பற்றி எரியும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், இந்தியாவுக்கு சென்றுவிட்டு நாடு திரும்பிய நிதி அமைச்சர் பசில் ராஜபக்‌ஷவிடம், ஊடகவியலாளர்கள் எதிர்காலத்தில் என்ன நடக்குமென வினவினார்கள். இதற்கு சிரித்தப்படியே "அதிகமாகச் சிந்திக்க வேண்டாம்" என பசில் கூறினார்.

அதாவது, அதிகமாக நாட்டு மக்கள் சிந்திக்க ஆரம்பித்தால், பசிலை இங்கிருக்கவிடமாட்டார்கள் என்பதாலேயே பசில் அவ்வாறு கூறினார்.

பசிலின் பதவியைப் பறிப்பதால் மாத்திரம், நாட்டை நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீட்க முடியாது. பசில் என்கிற பல்லை பிடுங்குவதால் மாத்திரம் வாய் சுத்தமாகாது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, பசில் ராஜபக்‌ஷவின் இரு மகள்களில் ஒருவர் இந்தியா பிரஜையையும், மற்றொருவர் பிரித்தானிய பிரஜையையும் திருமணம் முடித்துள்ளனர். இந்தியாவில் திருமணம் முடித்துள்ள பசிலின் மகளின் மாமனார், 'றோ' உளவு அமைப்பின் பிரதானியாவார் எனவும் தெரிவித்தார்.

இலங்கை கேட்கும்போதெல்லாம், கடன்களை இலங்கைக்கு வாரி வழங்குவதற்கு இந்தியாவுக்குப் பைத்தியமா? இலங்கையில் நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய தேவைகள் இந்தியாவுக்கு இருக்காதா? அதனடிப்படையில், லிட்றோ நிறுவனத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

"இன்றைய அரசாங்கம்

## அன்றைய பொழுதை கடத்துகிறது"



அன்றைய பொழுதை எவ்வாறு கடத்துவதென்றே அரசாங்கம் பார்க்கிறதே தவிர, நாட்டை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பங்களாதேஷுக்கு தொலைபேசியில் அழைப்பை எடுத்து, செலுத்த வேண்டிய 200 பில்லியன் டொலர்களை இப்போது செலுத்த முடியாது. எனவே அதனை செலுத்துவதற்கு கொஞ்சம் காலம் தேவையென அரசாங்கம் கேட்கிறது. அதற்குப் பின்னர் இந்தியாவுக்கு சென்று, எமக்கு கடன் வேண்டுமென கேட்கிறார்கள். அதனை பெற்றுக்கொண்டு சீனாவிடம் சென்று, உங்களிடம் பெற்றுக்கொண்ட கடனை செலுத்துவதற்கு கடன் தாருங்கள் என கேட்கிறார்கள்.

மறுபடியும் இந்தியாவிடம் சென்று நீங்கள் வழங்கிய கடன் போதாது. மேலதிகமாக கடனை தாருங்கள் என அரசாங்கம் கேட்கிறது. நாட்டை கட்டியெழுப்புவதற்கான திட்டம் இதுவல்ல. நாட்டை கட்டியெழுப்புவதற்கான எந்தவொரு வேலைத்திட்டங்களும் அரசாங்கத்திடம் இல்லை என்பதே இதனூடாக தெரிகிறது எனவும் கூறினார்.

## "எனக்கு நிம்மதி"



இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து தான் நீக்கப்பட்டதன் பின்னரே தான் நிம்மதியாக இருப்பதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, ஓர் அரசியல்வாதி அல்லர் என்பதால், பிரச்சினைகள் ஏற்படும்போது கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு அவர் இடமளிப்பதில்லை என்றார்.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மஹிந்த ராஜபக்‌ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோரைவிட தற்போதைய ஜனாதிபதி வித்தியாசமானவர். இதனை தெரிந்துகொண்டே நாட்டு மக்கள் அவருக்கு வாக்களித்தனர். எவ்வாறாயினும் பிரச்சினை ஒன்றுக்கு தவறான தீர்வை வழங்கும்போது, அந்தத் தீர்வே பாரதூரமான பிரச்சினையாகிவிடும். 'நான்' என்ற வசனங்களை ஜனாதிபதி அதிகம் பயன்படுத்துகிறார். "நான் செய்யவில்லை"; "பிரச்சினைகளுக்கு நான் காரணமில்லை"; "பிரச்சினைகளை நான் உருவாக்கவில்லை" என்றே கூறுகிறார். உண்மையில் 'நான்' என்பதற்குப் பதிலாக, 'நாம்' என்றே பயன்படுத்துவது அவருக்குப் பொருத்தமானது என்றார்.

## "செவிசாய்த்தால் சமூகப் புரட்சி"



சர்வதேச நாணய நிதியம் கூறுவதை சரியாகச் செய்தால், இலங்கையில் சமூகப் புரட்சியை மேற்கொள்ள முடியுமென ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

உரம் மீதான தடையை விதிக்க அரசாங்கம் எடுத்த தீர்மானம் தவறென சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், நல்லாட்சி அரசாங்கம் போல, அதிகமான வருமானத்தைப் பெறுபவர்களிடம் அதிகளவான வரியை அறிவிட வேண்டுமென்றும் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் வரி அறவிடும் முறையை முழுமையாக மாற்றியமைக்க வேண்டும். குறிப்பாக அதிகமான வருமானத்தை ஈட்டுபவர்களிடமிருந்து வரியை அறிவிட்டு, அதற்கான நிவாரணத்தை குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.



## ஆர்ப்பாட்டம்...

டீசல் உள்ளிட்ட எரிபொருட்களை வழங்குமாறு கோரி புத்தளம், மதுரங்குளி பல நோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக, சாரதிகள், பொதுமக்கள் நேற்று முன்தினம் (29) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(படங்கள்: ரஸீன் ரஸ்மின்)

## "விஷம் குடித்தல் முடிவுக்கு வந்தது"



ஏரிக்கரை அருகே போராட்டம் நடத்தப்படுகிறது. ஆனால், வாவி நிர்மாணிக்கப்படுவது ஊடகங்களில் காட்டப்படவில்லை. இன்று சிலர் சவால்களைக் கண்டு தப்பி ஓடுகின்றார்கள் என்று தெரிவித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, நாட்டின் தலைவரைக் கோழை என முன்னாள் அமைச்சர்கள் கூற முற்படுகின்றனர் என்றார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, தலைமையில் அலரிமாளிகையில் நேற்று (30) நடைபெற்ற இரண்டாம் கட்ட நீர்ப்பாசன செழுமையின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மிகவும் இக்கட்டான காலப்பகுதியில் நாம் இந்த அபிவிருத்தியை முன்னெடுத்து வருகின்றோம். மக்கள் மிகவும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள இவ்வேளையில், அரசாங்கம், அனைத்து சவால்களுக்கும் முகம் கொடுத்துள்ளது.

நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எத்தனை மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படும் என்று கேட்பார்கள். ஒரு குளம் கூட கட்டாத, நீர்ப்பாசனத் திட்டம் எதையும் முன்னெடுக்காதவர்கள் இன்று விவசாயிகளுக்காக பேசுகின்றனர்.

மஹிந்த ராஜபக்‌ஷவின் காலத்திலே விவசாய சமூகம் பொருளாதார ரீதியாக வலுவடைந்தது. விவசாயிகள் விஷம் குடிக்கும் காலம் முடிவுக்கு வந்தது என்றார்.

## "வட்டியை செலுத்துவதில் சிக்கல்"



பெற்றுக்கொண்ட கடன்களுக்கான வட்டியை செலுத்துவதற்கானப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், எதற்கெடுத்தாலும் கடன்களைப் பெற்றுகொண்டுள்ள நிலையில், தற்போது அந்த கடன்களுக்குரிய வட்டியை செலுத்துவதற்கானப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளோம்.

குடும்பத்தோடு இதனை ஒப்பிடும்போது வருமானத்தை விட அதிகளவான செலவுகளை செய்யும் பட்சத்தில் அதிகளவான கடனை பெற வேண்டிய நிலை ஏற்படும். ஒரு கட்டத்தில் கடனை திருப்பி செலுத்த முடியாத நிலைவரும்போது விபரீதமான முடிவுகளை எடுத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்றார்.

## "பிரச்சினையை தீர்க்காவிடின் பின்வாங்கத் தயங்கோம்"



எரிபொருள் பிரச்சினைக்கு இவ்வாரம் தீர்வு வழங்காவிட்டால் அடுத்த வாரத்தில் இருந்து நாடு முழுவதிலும் சேவையில் ஈடுபடும் அனைத்து பஸ்களும் சேவையிலிருந்து விலகுமென தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், இன்று போய் நாளை வா' என்பது போல அரசாங்கம் தொடர்ந்து செயற்படுகிறது. 'குட்டக் குட்டக் குனிபவன் முட்டாள்' என்பதுபோல, அரசாங்கத்தின் செயற்பாடுகளை இனியும் பொறுத்துகொண்டு இருக்க முடியாது.

தனியார் பஸ் உரிமையாளர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, எரிபொருள் பிரச்சினைக்கு அரசாங்கம் இந்த வாரத்தில் தீர்வு வழங்காவிட்டால், அனைத்து பஸ் தொழிற்சங்கங்களுடனும் கலந்துரையாடி அடுத்த வாரத்தில் இருந்து சேவைகளில் இருந்து விலகுவோம் என்றார்.

மைத்திரியின் இல்ல விவகாரம்:

## மஹிந்த அமரவீர விளக்கமளித்தார்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரபால சிறிசேனவுக்கு கொழும்பில் வழங்கவிருந்த இல்லத்துக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டமை தொடர்பில், சுதந்திரக் கட்சி கலந்துரையாட உள்ளதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இல்லமொன்றை வழங்குவதற்கு உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. உண்மையில் இந்த இல்லம் அவருக்கு உரித்தாக வழங்கப்பட்ட ஒன்றல்ல. இது தொடர்பில் போலியான கருத்துகள் சமூகத்தில் பரப்பப்பட்டமை கவலைக்குரியது.

முன்னாள் ஜனாதிபதிக்கு வீடொன்றை வழங்குவதற்கான சட்டம் நாட்டில் காணப்படுகிறது. இதன்படியே வீடொன்று வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் உயிர்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு தொடர்பில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை கலந்துரையாடப்படும் எனவும் தெரிவித்தார்.



## எதிர்க்கட்சிகளே முழுப் பொறுப்பு

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு எதிர்க்கட்சிகளே முழுப்பொறுப்புக்கூற வேண்டுமென அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், 2 பில்லியன் ரூபாய் பெறுமதியான பிரச்சினைகளே நாட்டில் காணப்படுகிறது. நல்லாட்சி அரசாங்கம் பிணைகளை விற்பனை செய்து 13 ஆயிரம் பில்லியன்களை பெற்றுக்கொண்டுள்ளது. இதுவே நாட்டின் தற்போதையப் பிரச்சினைக்குக் காரணம் என்றார்.

இதேவேளை நல்லாட்சி அரசாங்கத்தின் பின்னர் நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வரும்போது கொரோனா வைரஸ் தொற்றால் ஒட்டுமொத்த நாட்டையும் முடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு நாட்டை மூடியதால் 1,500 மில்லியன் ரூபாய் நட்டம் நாட்டுக்கு ஏற்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு அரசாங்கத்தைக் குறைகூறும் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

"மாகாண சபை முறைமை

# சிறந்த ஆரம்பம்"

எஸ்.தில்லைநாதன்

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கான சிறந்த ஆரம்பமாக மாகாண சபை முறைமையே என்ற தனது வழிமுறையை, தமிழ்த் தரப்புகள் ஏற்றுக்கொண்டிருப்பதை தாம் வரவேற்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை அபிவிருத்தி உட்பட பல திட்டங்களுக்கான கோரிக்கைகளையும் இந்தியாவிடம் அவர் முன்வைத்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரை, திங்கட்கிழமை (28) சந்தித்துப் பேசிய போதே மேற்கண்ட விடயங்களை, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்

இது தொடர்பில்



அவரின் ஊடகப்பிரிவு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பருத்தித்துறை, பால்சேனை உட்பட வடக்கு, கிழக்கு பகுதிகளில் மீன்பிடித் துறைமுகங்களை அமைத்துத் தருவதற்கு, ஏற்கெனவே இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கை கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவற்றைத் தீர்ப்பதற்கு இந்தியாவால் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன. குறிப்பாக, இந்திய கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

மேலும், வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை தொடர்பான சுமார் 23 திட்டங்களைகளை இந்திய வெளியுறவு அமைச்சரிடம் கடற்றொழில் அமைச்சர் முன்வைத்துள்ளார்.

"பேச அழைத்து விட்டு, பேச மாட்டோம் என்றால்

# என்ன நியாயம்?"

## சுமந்திரம் எம்.பி கேள்வி

வா.கிருஸ்ணா



"அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்களும், ஜனாதிபதி எங்களுடன் பேச வரவேண்டும் என்றே ஆர்ப்பாட்டம் செய்தோம். பேசவாருங்கள் என்று ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு, அவர் பேச்சுவார்த்தைக்குத் திகதி கொடுக்கும் போது, பேச மாட்டோம் என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கின்றது?" என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வியெழுப்பினார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (29) மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

மேற்படி ஊடக சந்திப்பில் சுமந்திரன் எம்.பி மேலும் தெரிவிக்கையில், "இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், எங்களுடன் நடத்திய உரையாடலில், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை சம்மந்தமாக பேசினார்.

"இது சம்மந்தமாக எங்களுக்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்ததாகவும், நாங்கள் தெரிவித்த விடயத்தை ஜனாதிபதி ஏற்கெனவே சொல்லியிருப்பதாகவும் உடனடி விடயங்கள் சம்மந்தமாக ஏற்பட்டிருக்கும் இணக்கப்பாடு அல்லது வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று இந்தியாவுக்கு ஜனாதிபதி உறுதியளித்ததாகவும் எங்களுக்குத் தெரியப்படுத்தினார்.

"உடனடி விடயங்களில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பு சம்மந்தமாக நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

"நில அபகரிப்பு தொடர்பில் நீண்ட பேச்சுவார்த்தை நடத்தினோம். வெவ்வேறு சட்டங்களின் அடிப்படையில் எமது நிலங்கள் அபகரிக்கப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு அவர்கள் இணங்கினார்கள்.

"அதற்கப்பால் நிர்வாக எல்லைகளை மாற்றுகின்ற முயற்சி நடைபெறுகின்றது. அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதற்கான அறிவிப்பை தாம் உடனடியாக வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்தார். இராணுவத் தேவைக்காகப் புதிய சுவீகரிப்புகள் செய்யப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டது.

"அத்துடன், போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கென்று ஒரு விசேட அபிவிருத்தி நிதியமொன்று உருவாக்குவதற்கு அரசாங்கம் இணங்கியிருக்கின்றது. அது எவ்வாறு என்ற விடயங்கள் இன்னும் பேசப்படவில்லை. இது தொடர்பில் எதிர்வரும் காலங்களில் பேசி முதலீட்டாளர்களை எவ்வாறு வருவிப்பது என்பது தொடர்பிலும் கலந்துரையாடுவோம்.

"இதற்கு மேலதிகமாக நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்து ஆராயும் முகமாக அனைத்துக் கட்சிகள் தொடர்பான கூட்டமொன்றும் நடைபெற்றது. பல எதிர்க்கட்சிகள் அதனைப் பகிஸ்கரித்தன. அரசாங்கத்தில் இருக்கும் இரு கட்சிகள் கூட இதனைப் பகிஸ்கரித்தன.

"ஆனால், இது அரசாங்கத்தைப் பொறுத்த ஒரு விடயம் அல்ல. முழு நாட்டையும் மக்களையும் மிக மோசமாகப் பாதிக்கும் ஒரு விடயம். அந்த விடயத்தை அரசாங்கம் பார்த்துக் கொள்ளட்டும் என்று கூறி இருக்க முடியாது. பொறுப்பான ஓர் அரசியல் கட்சியாக மக்கள் பிரதிநிதிகளாக, இந்த விடயம் குறித்தும் அரசாங்கத்தோடு பேச வேண்டிய அத்தியாவசியத் தேவை இருந்தது.

"எனவே, நாங்கள் அதில் கலந்துகொண்டு, எங்கள் முன்மொழிவுகளை, சிபாரிசுகளைச் சொல்லியிருக்கின்றோம்" என்றார்.

அரச உத்தியோகஸ்தர்

# வீட்டில் கைவரிசை; இருவர் கைது

எம்.றொசாந்த்

நாவற்குழி பகுதியில் வசிக்கும் அரச உத்தியோகஸ்தரின் வீட்டை பட்டப்பகலில் உடைத்து ஏழு பவுண் நகையை திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தது வந்தனர்.

இந்நிலையில், மேற்படி குற்றத்தில் ஈடுபட்ட இருவரை, சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் (29) பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் திருடப்பட்ட நகை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம், அராலி வடக்கு, செட்டியார் மடம் பகுதியில் வீடு ஒன்றை உடைத்து பெறுமதியான அலைபேசி மற்றும் பணம் என்பவை திருடப்பட்டுள்ளன.

அப்பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தவர்கள் வெளியில் சென்று இருந்த சமயம், வீட்டின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் கைவரிசையை காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் வீட்டு உரிமையாளரால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.





இலங்கைக்கு கடத்த இருந்த

# களைக்கொல்லி பறிமுதல்

லெம்பர்ட், சுப்பிரமணியம் பாஸ்கரன்

தமிழகத்தின் தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்பிலான களைக்கொல்லி பூச்சிமருந்துகளை க்யூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்ட கடற்கரை பகுதிகளில் இருந்து இலங்கைக்கு அண்மைகாலமாக கஞ்சா, அபின் உள்ளிட்ட போதைப்பொருட்களும் மஞ்சளும் அதிக அளவில் கடத்தப்பட்டு வருவதும் பொலிஸார் அவற்றை சுற்றிவளைத்து பறிமுதல் செய்வதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், தூத்துக்குடி, திரேஸ்புரம் கடற்கரையில் க்யூ பிரிவு பொலிஸார் தூத்துக்குடி வடக்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திரேஸ்புரம் கடற்கரையில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

> **சரக்கு வாகனத்தில் இருந்து, ஒரு வள்ளத்தில் முடைகளை ஏற்றிக் கொண்டிருந்தவர்கள் தப்பியோடியுள்ளனர்**

அப்போது அவர்களுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் படி, திரேஸ்புரம் கடற்கரையில் ஒரு வள்ளத்தில் சரக்கு வாகனத்தில் இருந்து முடைகளை ஏற்றிக் கொண்டிருப்பதை கண்டு, அவர்களை சுற்றிவளைக்க முற்பட்டபோது அவர்கள் தப்பியோடியுள்ளனர்.

தொடர்ந்து அங்கிருந்த சரக்கு வாகனத்திலும் வள்ளத்திலும் இருந்த பூச்சிமருந்துகள் 700 லீட்டர், கடத்தலுக்கு பயன்படுத்திய சரக்கு வாகனம், வள்ளம் ஆகியவற்றை க்யூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார், தப்பியோடியவர்களை தேடி வருகின்றனர்.



# ஓட்டோவில் கஞ்சா; இருவர் கைது

கனகராசா சரவணன்

காத்தான்குடியில் இருந்து கருவப்பங்கேணி பிரதேசத்துக்கு ஓட்டோவில் கேரளா கஞ்சாவை எடுத்துச் சென்று விற்பனையில் ஈடுபட்ட கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த இருவரை, நேற்று முன்தினம் (29) கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

> **கேரளா கஞ்சாவை வியாபாரத்துக்கு காத்தான்குடியில் இருந்து கருவப்பங்கேணி பிரதேசத்துக்கு ஓட்டோவில் எடுத்து வந்த இருவரையும் மடக்கிபிடித்து கைது செய்ததுடன், அவர்களிடமிருந்து 90 கிராம் கேரளா கஞ்சா மற்றும் ஓட்டோவையும் கைப்பற்றினர்**

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து, மட்டு. தலைமையக பொலிஸ் நிலையப் பெரும் குற்றத்தடுப்பு பிரிவினருடன் மாவட்ட புலனாய்வு பிரிவினரும் இணைந்து குறித்த பகுதியில் உள்ள வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது கேரளா கஞ்சாவை வியாபாரத்துக்கு ஓட்டோவில் எடுத்து வந்த இருவரையும் மடக்கிபிடித்து கைது செய்ததுடன், அவர்களிடமிருந்து 90 கிராம் கேரளா கஞ்சா மற்றும் ஓட்டோவையும் கைப்பற்றினர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள், கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள மகிழடித்தீவு மற்றும் வீட்டுத்திட்டப் பகுதியைச் சேர்ந்த 46 மற்றும் 37 வயதுடையவர்கள் எனவும் காத்தான்குடி, கர்ப்பலா பகுதியில் இருந்து கஞ்சாவை வாங்கிக்கொண்டு கருவப்பங்கேணி பிரதேசத்துக்கு விற்பனைக்கு எடுத்துச் சென்றதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மக்களின் கஷ்டங்களை

# வேடிக்கை பார்க்கிறது அரசாங்கம்

ஹஸ்பர்

எரிபொருள் விலை ஏற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நல்லாட்சிக்கான தேசிய முன்னணியைச் சேர்ந்த கிண்ணியா நகர சபை உறுப்பினர் முஸ்தபா நஸ்ரூதீன், நகர சபையின் 48 அமர்வுக்கு, நேற்று முன்தினம் (29) சைக்கிளில் சென்றார்.

'பொருட்களின் விலையேற்றத்தால் மக்களின் வாழ்க்கையை வதைக்காதே', 'எரிபொருள், எரிவாயு, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை உடன் நிறுத்து' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைளை சைக்கிளில் வைத்திருந்தார்.

அத்தோடு, சபை அமர்விலும் எரிபொருள், எரிவாயு, அத்தியவசியப் பொருட்கள், ஏனைய பொருட்களின் விலையேற்றத்தை எதிர்த்து பிரேரணை ஒன்றை அவர் முன் வைத்தார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர், "நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற தொடர் விலை ஏற்றம், பொருட்களின் தட்டுப்பாடு



அத்தனை தரப்பு மக்களையும் அதாளபாதாளத்துக்கு தள்ளியுள்ளது. மக்களின் கஷ்டங்களை அரசாங்கம் அறிக்கைவிட்டு, வேடிக்கை பார்க்கின்றது.

"மக்களின் கல்வி, மருத்தும் என்பன பாதிக்கப்பட்டு, நாட்டை விட்டும் வெளியேற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. பொருள் கொள்வனவிற்காக வரிசையில் மக்கள் காத்திருக்கின்ற நிலையில், உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளை அரசாங்கம் வெளியிடுகிறது. இவ்வாறான நிலையை மாற்றி, மக்களுடைய வாழ்க்கையில் சாதகமான தீர்வை இந்த அரசாங்கம் முன்வைக்க வேண்டும்" என்றார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திகள்

# ஆராய்வு

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரனின் அறிமுக உரையுடன், இணைத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (30) நடைபெற்றது.

இக்கூட்டத்தின் போது, கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற முதலாம் காலாண்டுக்கான புதிய வேலைத் திட்டங்களின் முன்னேற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், எம்.ஏ சுமந்திரன், செல்வராஜா கஜேந்திரன், கரைச்சி கண்டாவளை பூநகரி பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச





செயலாளர்கள், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

புத்தரிசி விழாவுக்கு

# 650 கி.கி அரிசி கையளிப்பு

ரீ.எல்.ஜவ்பர்கான்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், அநுராதபுரம் ஜெயபோதியில் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி நடைபெறவுள்ள புத்தரிசி பெருவிழாவில் இடம்பெறும் அன்னதானத்துக்கென மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 650 கிலோ கிராம் அரிசி, லொறி மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாக, மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள நிர்வாக அதிகாரி ஏ.எம். ஜௌபர் தெரிவித்தார்.

அரிசி கையளிக்கும் விழா, கமநல சேவைகள் அபிவிருத்தி நிலையத்தில் நேற்று (30) காலை நடைபெற்றது.

கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்கள



நிர்வாக அதிகாரி எம். எம்.ஜௌபர் இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட விவாயிகளால் பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லிலிருந்து பெறப்பட்ட அரிசியை அன்னதானத்துக்காக விவசாயிகள் வழங்கினர்.

இவ்வாறு கையளிக்கப்பட்ட அரிசி, அநுராதபுரத்துக்கு நேற்றுக் காலை அனுப்பிவைக்கப்பட்டது.

மின் துண்டிப்பு, எரிபொருள் தட்டுப்பாட்டால்

# கொழுந்து அரைப்பதில் சிக்கல்

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

நாடளாவிய ரீதியிலான மின் துண்டிப்பு, 10 மணித்தியாலங்கள் நீடிக்கப்படுதல், தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு தேவையான டீசல் கிடைக்காமை போன்ற காரணங்களால் இன்றிலிருந்து (31) தேயிலைத் தோட்டங்களின் அன்றாட செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தோட்ட முகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாளாந்த மின் துண்டிப்பால் தேயிலைத் தொழிற்சாலையின் தேயிலைத் தூள் உற்பத்தியானது, மின் பிறப்பாக்கி இயந்திரம் மூலமே முன்னெடுக்கப்படுவதாகவும் குறித்த இயந்திரத்துக்காக நாளொன்றுக்க பாரிய தொகை டீசல் தேவையென தோட்ட முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.



பறிக்கப்பட்ட தேயிலை கொழுந்து விநியோகத்திலிருந்து உற்பத்தி வரை அனைத்துக்கும் மின்சாரம் அவசியம் என்றும் தேயிலைக் கொழுந்துகளை காயவைத்து, தூளாக்குவதற்கு போதியளவு நேரம் தேவை என்றும் குறித்த நேரப்பகுதிக்குள் அதனை காய வைக்க முடியாவிட்டால், இயந்திரத்துக்குள் போடப்படும் கொழுந்து முழுமையாக அழிவடையும் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில், தேயிலை உற்பத்தி செயற்பாடுகள் பாரிய ஸ்தம்பிதத்தை எதிர்நோக்கியுள்ளதால், தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு தேவையான டீசலை பெற்றுக்கொடுப்பதற்கான முறையொன்றை ஏற்படுத்துமாறு அரசாங்கத்திடம் தோட்ட அதிகாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திடீர் வழிமறிப்பு போராட்டத்தால்

# ஹட்டனில் பெரும் பதற்றம்

■ எம்.கிருஸ்ணா எஸ்.கணேசன்

ஹட்டன் நகரில் உள்ள பிரதான வழிகளை மறித்து சாரதிகளும் ஒட்டோ ஓட்டுநர்களும் பொதுமக்களும் நேற்று (30) திடீர் போராட்டத்தில் ஈடுபட்டதால், அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன், ஹட்டன் நகரம் பகுதியளவு ஸ்தம்பிதமடைந்தது.

ஹட்டன் நகரிலுள்ள எரிபொருள் நிலையத்தில் டீசலை பெற்றுக்கொள்வதற்கு நேற்று முன்தினம் (29) மாலை முதல் சாரதிகள் காத்திருந்தனர். எனினும், இறுதி நேரத்தில் டீசல் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த சாரதிகள், பொதுமக்களுடன் இணைந்து ஹட்டன் மணிக்கூட்டு கோபுரம் சந்தியில் நேற்றுமுன்தினம் (29) இரவு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸாரின் தலையீட்டுடன் போராட்டம்




நிறுத்தப்பட்டது.

எனினும், நேற்று (30) காலை 9 மணிக்கு டீசல் விநியோகிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. அந்த உறுதி மீறப்பட்டதால் சாரதிகள் வீதிக்கு இறங்கி போராடத் தொடங்கினர்.

இதனால், ஹட்டன் பஸ் தரப்பிடத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு புறப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்கள், பல மணிநேரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏற்றுமதி பயிர்கள் ஆய்வு தொடர்பான

# பல்கலைக்கழகத்தை நிறுவ கோரிக்கை

■ மஹேஸ் கீர்த்திரத்ன

ஏற்றுமதி பயிர்கள் தொடர்பான மேலதிக ஆய்வுக்காக, பெருந்தோட்டத்துறையுடன் தொடர்புடைய பெருந்தோட்ட ஆராய்ச்சி பல்கலைக்கழகமொன்றை ஆரம்பிக்க அமைச்சரவையில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக பெருந்தோட்டத்துறை அமைச்சர், ரமேஸ் பத்திரண தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நேற்று முன்தினம் (29) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், கொரோனா தொற்றுக்கு மத்தியில் 2021ஆம் ஆண்டு, 30 சதவீத வருமானம் ஏற்றுமதி பயிர்களால் பெறப்பட்டுள்ளன. இது நாம் பெற்ற வெற்றியாகும்.

இன்று எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பயிர்களுக்காக பாரிய பங்களிப்பை செய்து வருகிறோம். இதற்கமைய கறுவா உற்பத்திக்கு சர்வதேச சந்தையில் பாரிய கேள்வி உள்ளது.



அதேபோல கித்துல், தேங்காய் உள்ளிட்ட ஏனைய பொருட்களுக்கும் பாரிய கேள்வி உள்ளது.

எனவே, நாம் இந்த ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்து, டொலர் பிரச்சினைக்குத் தீர்வைத் தேட எதிர்பார்க்கின்றோம். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை நிறுத்தி, இலங்கையில் அதனை பயிரிட நடவடிக்கை எடுத்தோம். அதனால் இன்று உள்ளூர் உற்பத்தியாளர்களின் வருமானம் அதிகரித்துள்ளது என்றார்.

## காதல் தீயில் சிக்கிய தாயும் உயிரிழந்தார்

■ சேஹ்ன் செனவிரத்ன

கட்டுகஸ்தோட்டை, மெனிக்கும்புர பகுதியில் உள்ள வீடொன்றில், கடந்த 24ஆம் திகதி காலையில் ஏற்பட்ட தீப்பரவலால் காயமடைந்து, கண்டி வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த பெண்ணும் உயிரிழந்துள்ளார்.

அன்றைய சம்பவத்தில், தந்தை, மகள், மகளுடைய காதலன் என மூவர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். பலத்த எரிகாயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த ராணி அம்மாவும் (வயது 65) நேற்று (30) உயிரிழந்துள்ளார் என கட்டுகஸ்தோட்டை பொலிஸார்



தெரிவித்தனர்.

உயிரிழந்த யுவதியின் காதலனாலேயே தீப்பற்ற வைக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் மூலம் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காவலாளியை கொன்ற குளவி

■ சேஹ்ன் செனவிரத்ன

கண்டி, முதுன, ஹேனவத்த பிரதேசத்தில் குளவிக்கொட்டுக்கு இலக்கான கண்ணன் சுப்பையா (வயது 52) உயிரிழந்துள்ளார்.

வைத்தியர் ஒருவரின் தோட்டத்தில் காவல் காத்துக்கொண்டிருந்த போது, குளவிக்கொட்டுக்கு இலக்காகி கலகெதர பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என கலகெதர பொலிஸார் தெரிவித்தனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும்

# நிவாரண நிதி

### அரவிந்தகுமார் எம்.பி உறுதி

■ எம். செல்வராஜா

குறைந்த வருமானங்களைப் பெறும் பெருந் தோட்ட தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பத்தாயிரம் ரூபாய் என்ற அடிப்படையில், மொத்தமாகவோ அல்லது இரு தவணைகளிலோ நிவாரணம் வழங்கப்படுமென, நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷ தெரிவித்தாக, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷவை சந்தித்து கலந்துரையாடிய போதே, மேற்படி விவகாரம் தொடர்பில் எடுத்துரைத்ததாக அரவிந்தகுமார் தெரிவித்தார்.



அனர்த்தத்தை குறைப்பதற்கு

## முன்னாயத்தம்

■ என்.ஆராச்சி

எதிர்வரும் நாள்களில் எதிர்பார்க்கப்படும் பலத்த மழையுடனான வானிலையால், கேகாலை மாவட்டத்தில் ஏற்படக் கூடிய அனர்த்தங்கங்களைக் குறைப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று, அண்மையில் நடைபெற்றது.

கேகாலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த விசேட கலந்துரையாடலில், தற்காலிக முகாம்களில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து அதிகம் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் பாதுகாப்பற்ற இடங்களிலிருந்து மக்களை அப்புறப்படுத்தல், தற்போது ஆபத்தை எதிர்நோக்கியுள்ள பகுதிகள், மரங்கள், கிளைகளை வெட்டி அகற்றுதல் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டன.

மேலும் அனர்த்த மீட்பு நடவடிக்கையின் போது, வள்ளங்களை தயார் நிலையில் வைத்திருத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், அனர்த்த நிலைமைகளின் போது பொதுமக்கள் மற்றும் சொத்துகளுக்கு ஏற்படும் பாதிப்பை குறைத்த மாவட்டமாக கேகாலை மாவட்டத்தை உருவாக்குவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதேசசபைகளின் தவிசாளர்கள், மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய, மேலதிக மாவட்ட செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பொலிஸாரின் தலையீட்டுடன்

## சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம்



■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

ஹட்டனில் நேற்று (30) பொலிஸாரின் தலையீட்டுடன், நுகர்வோருக்கான சமையல் எரிவாயு விநியோகம் முன்னெடுக்கப்பட்டது.

லிட்ரோ நிறுவனத்தால், ஹட்டன் பிரதேசத்திலுள்ள முகவர் நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் உரிய முறையில் நுகர்வோருக்கு விநியோகிக்கப்படுவதில்லை என, ஹட்டன் பொலிஸாரிடம் நுகர்வோர் முறைப்பாடு தெரிவித்ததை அடுத்து, நேற்றைய தினம் பொலிஸாரின் முன்னிலையில் சிலிண்டர் விநியோகம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் ஹட்டனில் விலை அதிகரித்து எரிவாயு சிலிண்டரை விநியோகிப்பதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு அமைய, ஹட்டன் பிரதேச லிட்ரோ விற்பனை பிரதிநிதியொருவர் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## பொறியியல் இறுதியாண்டு மாணவன் இறுதிசெய்தார்

■ சேஹ்ன் செனவிரத்ன

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் இறுதியாண்டு பயிலும் குருநாகல், மெல்சிறிபுர பகுதியைச் சேர்ந்த 25 வயதான மாணவன், பல்கலைக்கழக விடுதிக்குள் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என பேராதனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இறுதியாண்டு பரீட்சைகள் தற்போது நடைபெற்று வரும் நிலையில், குறித்த மாணவன் அனைத்து பரீட்சைகளிலும் தோற்றியுள்ளார். எனினும், இறுதிப் பரீட்சைக்கு அவர், சமூகமளிக்காமையால் அவரது நண்பர்கள் அவரை தேடியுள்ளதுடன், அவரது அலைபேசியும் செயலிழந்துள்ளது.

இந்த நிலையில் விடுதிக்கு தேடி சென்ற போது, அங்கு மாணவன் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளதை கண்டுள்ளனர்.

பின்னர், அவரது அறையிலுள்ள மேஜை மீது, உயிரிழந்த மாணவனால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று இருந்துள்ளதுடன், அதில் 'எனது இறப்புக்கு நானே காரணம்; என்னை மன்னியுங்கள். இந்த அழுத்தத்தை தன்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை' என எழுதியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சுற்றுலாப் பயணிகளால்

### நாரங்கல மலைக்கு ஆபத்து

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்ந்த சொரணாதொட்ட-நாரங்கல மலையைப் பார்வையிடுவது தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இத்தடையையும் மீறி, சுற்றுலாப் பயணிகள் சில நாள்களாக சென்று வருகின்றனர்.

அத்துடன் அந்த மலைப் பகுதியில் கூடாரங்களை அமைத்து, இரவில் தங்குவதாக நேற்று (30) நடைபெற்ற பதுளை



மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த மலைப் பகுதிக்கு வருகைத் தரும் சுற்றுலாப் பயணிகளால் சுற்றாடலுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படுவதாகவும் அங்கு, மதுபாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

குறித்த பகுதியில் கூடாரம் அமைத்து தங்கியிருந்த 22 வயது இளைஞர் ஒருவர், 1,200 அடி பள்ளத்தில் வீழ்ந்து உயிரிழந்ததையடுத்து, அங்கு தங்குவதற்கு தடைவிதிக்கப்பட்டது.

எனினும், இந்தத் தடையையும் மீறி, அங்கு செல்பவர்கள் கூடாரம் அமைத்து தங்குவதாகவும் இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# “செத்த கோழிகளை வாங்கவேண்டாம்”

### விற்பனையாளர்கள் எச்சரிக்கை

■ இந்திக அருணகுமார

மாத்தளை மாவட்டத்தில் கோழி பண்ணைகளில் உயிரிழக்கும் கோழிகளை, குறைந்த விலையில் விற்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாகவும், கோழி இறைச்சியின் விலை அதிகரிப்பை அடுத்தே, இவ்வாறு விற்பனை செய்யப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



எனவே, மாத்தளை மாவட்டத்தில் குறைந்த விலையில் கோழி இறைச்சி விற்பனை செய்யப்பட்டால், அவற்றை கொள்வனவு செய்ய வேண்டாம் என, கோழி இறைச்சி விற்பனையாளர்கள் நுகர்வோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பண்ணைகளில் உயிரிழக்கும் கோழிகள் அங்கேயே குழி தோண்டி புதைக்கப்படும். ஆனால் பெரியளவான பண்ணைகளில் உயிரிழக்கும் கோழிகள், அங்கு வேலை செய்யும் பணியாளர்களைப் பயன்படுத்தி, சில இடைத்தரகர்கள் இவ்வாறான செயல்களை செய்வதாகவும் அறியமுடிகின்றது.

இவ்வாறு உயிரிழக்கும் கோழிகளை வர்த்தக நிலையங்களுக்கு அனுப்பாமல், நுகர்வோரின் வீடுகளுக்கே அனுப்பும் செயற்பாடும் குறிப்பாக பண்டிகைக் காலங்களில் முன்னெடுக்கப்படுவதாகவும் மோட்டார் சைக்கிள்கள் மூலமே இவ்வாறான வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு எனப் புரிந்து கொள்வது அவசியம்

ஒருவரின் தலையில் குட்டக் குட்ட, அவர் எவ்விதமான எதிர்ப்பையும் வெளிப்படுத்தாது தொடர்ந்து குனிந்து கொண்டிருப்பதால், முட்டாள் என சிந்தித்தால், அதுதான் நினைப்பவரின் பெரிய முட்டாள்தனமாகும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், வரிசைகள் பலவகை கோணங்களில் சென்றுகொண்டிருக்கின்றன. இதில் முதலாவது வரிசை, வாக்களிப்பதற்காக நின்றது. இறுதியில், எரிபொருள், காஸ் உள்ளிட்டவற்றுக்கு வரிசையில் நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இடையில், கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்கு வரிசையில் நின்றிருந்தோம். அதற்கு முன்னர், வீதியோர சுவர்களில் வரிசையாக நின்று சித்திரங்களை கீறி, வர்ணம் தீட்டினார்கள். ஆக, வரிசையில் நிற்பதற்காக முன்னரே பழக்கப்படுத்தப்பட்டு உள்ளனர் என்பது, இன்றைய வரிசைகளைப் பார்க்குமிடத்து புரிகின்றது.

இந்தவரிசை, இன்னும் பல கோணங்களில் விரிவடையும் என்பதில் ஐயமே இல்லை. அந்தளவுக்கு ஒவ்வொரு பொருட்களுக்கும் பாரிய தட்டுப்பாடு நிலவிக்கொண்டிருக்கின்றது. சாதாரண சாப்பாட்டுக் கடைகளில் கூட, வரிசையில் நிற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களை பொறுத்தவரையில், ஏதாவது விசேஷமான நாள், இன்றேல் பெருநாள்களில்தான் வரிசையை அவதானிக்க முடியும். பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக முண்டியடித்துக்கொண்டு நிற்பார்கள். பெருநாள்கள் நெருக்கி வருகின்ற போதிலும், அவ்வாறான கடைகளில் எல்லாம் வரிசையே இல்லை.

தமிழ்-சிங்கள புத்தாண்டு காலமென்றால், நகரங்கள் மட்டுமன்றி ஊரே களைக்கட்டியிருக்கும். எனினும், எல்லாமே சோபையிழந்து நிற்கின்றன. எனினும், எரிபொருள், காஸ் உள்ளிட்டவற்றை கொள்வனவு செய்வதற்கான வரிசை நீண்டுகொண்டே செல்கின்றது.

அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. எதிரணி அரசியல் கட்சிகளால், திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்படும் பேரணிகளுக்கு அப்பால், திடீரென ஆர்ப்பாட்டத்தில் குதிக்கும் அளவுக்கு மக்கள் பொறுமை இழந்து நிற்கின்றனர்.

இதற்கிடையே, “டீசலை கொள்வனவுச் செய்வதற்காக, எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு யாரும் வரவேண்டாம். வந்து கால்கடுக்க நிற்பதில் பிரயோசனம் இல்லை”யென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இது மக்களிடத்தில் இன்னும் கோபத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

முக்கிய துறைகளில் ஒன்றான தேயிலைத் துறையும் டீசல் இன்மையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையை இயக்குவதற்கு தேவையான டீசல் இன்மையால், பெரும்பாலான தோட்டங்களில் பறிக்கப்படும் பச்சை கொழுந்து, காய்ந்து விடுகின்றது.

நீர்பாய்ச்சி பெருமெடுப்பில் விவசாயம் செய்வோர், தங்களுடைய விவசாயத்துக்குத் தேவையான தண்ணீரை பாய்ச்சிக்கொள்வதற்கு, இயந்திரத்தை இயக்குவதற்குத் தேவையான டீசல் இன்மையால், நிலைகுலைந்து நிற்கின்றனர்.

ஒவ்வொரு நாளும் புதுப்புதுப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. கடனை திருப்பிச் செலுத்த, கடன் கேட்க வேண்டிய நிலைமைக்குள் அரசாங்கம் விழுந்துவிட்டது. இதற்கிடையே, அரசாங்கத்துக்கு எதிரான தனிமனித குரலின் சத்தம் அதிகரித்துவிட்டது. அவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு சரியான தீர்மானத்தை எடுப்பதே காலத்தின் தேவையாகும்.

பொறுமையிழந்து நிற்கும் மக்களை மீண்டும், மீண்டும் சீண்டிப்பார்க்காது. தற்காலிக நிவாரணங்களை கொடுத்து சாந்தப்படுத்தி, நிரந்தர தீர்வுக்குச் செல்லவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கடும்பசி வரும்போது எந்த உணவும் சுவையானதுதான். எந்தப் பணக்காரருக்கும் உதவியற்ற நேரத்தில், உணவும் தண்ணீரும் இன்றித் தவித்தால், அவர்களும் ஏழைகளாகி விடுகின்றனர்.

பசியின் கொடுமையை உணர்ந்த பரோபகாரிகள், விருப்பத்துடன் தர்மகாரியங்களையும் இயன்றவரையில் உணவுக்கான பொருள் வழங்குதலையும் இரக்க சிந்தனையுடன் செய்கின்றார்கள். கொடை வழங்கல் தொடரவேண்டும்.

இன்று எமது நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகளில் மிகமுக்கியமானது, அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடாகும். நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு, அனைத்துப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துவிட்டன.

இந்தக் குறைபாடுகளை அரசாங்கம் தான் தீர்க்க வேண்டும். சாதாரண வாழ்க்கைச் சுழலில் ஏழைகளாக, ஒருவேளை உணவுக்கே அவதிப்படுபவர்கள், தற்போது நிலவும் பஞ்ச காலத்தில் என்ன செய்வார்கள்?

வசதியற்றவர்கள், நடுத்தரவர்க்கத்தினர் போன்றோர் பஞ்சத்தால் படும் அவலங்களை சொல்வதற்கு வார்த்தைகள் கிடையாது. இந்தப் பஞ்ச நிலைமையில் இருந்து மீள, அரசாங்கம் இன்னும் சரியான வழிவகைகளை காணவில்லை. முடிவிலாப் பிரச்சினையாக, இல்லாமை இருத்தல் ஆகாது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அறிக்கை பெறுவதில் இழுத்தடிப்பு

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில், பொலிஸ் அறிக்கை பெறுவதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் குறிப்பாக, ஒரு நாளில் வழங்க வேண்டிய பொலிஸ் அறிக்கைகள், காலம் தாழ்த்தியே வழங்கப்படுதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சாரதி அனுமதி பத்திரம், அடையாள அட்டை போன்றவை தொலைந்தமை உட்பட காப்புறுதி பத்திரங்கள் போன்றவற்றுக்கான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதில் இழுத்தடிப்பு செய்யப்படுவதாக, பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரே நாளில் வழங்க வேண்டிய அறிக்கைகள் கூட, இரண்டு வாரங்களின் பின்னரே வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. காரணம், சில பொலிஸார் கையூட்டு பெறுவதற்காகவே இவ்வாறு நடந்து கொள்வதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது. பொலிஸாரின் இந்தப் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக, சேவை பெறுநர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஒரு சில பொலிஸாரின் இத்தகைய செயற்பாடு காரணமாக, முழு பொலிஸ் திணைக்களத்துக்குமே இழுக்கும் அவமானமும் ஏற்படுவதாகவும் சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

பொலிஸ் அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான இத்தகைய கால இழுத்தடிப்பு தொடர்பில், பொலிஸ் உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

செந்தூரன் பிரதீபன்

சந்தர்ப்பத்தை கூட்டமைப்பு

# சரியாகப் பயன்படுத்த வேண்டும்



புருஜோத்தமன் தங்கமயில்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை, நீண்டகால காத்திருப்புக்குப் பின்னர் நடந்து முடிந்திருக்கின்றது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் தொடர்பில், ஆட்சியில் இருக்கும் எந்த அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக, கூட்டமைப்பு தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்திருக்கின்றது.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில், சஜித் பிரேமதாஸவுக்கு கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்த தருணத்திலும், பின்னர் பொதுத் தேர்தல் காலத்திலும் கூட, “புதிய ஜனாதிபதியுடனும் அரசாங்கத்துடனும் பேசுவோம்” என்று கூட்டமைப்பு கூறியது.

அதன்போக்கில், ராஜபக்ஷர்கள் ஆட்சிக்கு வந்ததும் பேச்சு வார்த்தைகளுக்காக காத்திருக்கிறோம் என்கிற தொனிப்பட கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஜனாதிபதிக்கு கடிதமும் எழுதியிருந்தார். ஆனால், அவ்வாறானதொரு சந்திப்பை நடத்துவதற்கு ராஜபக்ஷர்கள் சுமார் இரண்டு ஆண்டுகள் காலம் எடுத்திருக்கிறார்கள்.

அதுவும், இலங்கையின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை எட்டி, என்ன செய்வது என்று தெரியாமல் ராஜபக்ஷர்கள் ‘முழிபிதுங்கி’க் கொண்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்தில், கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையை நடத்தியிருக்கிறார்கள்.

ராஜபக்ஷர்களுக்கு பேச்சுவார்த்தைகளை நடத்தி, பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது தொடர்பில், பெரிய நம்பிக்கைகள் இல்லை. இராணுவ அணுகுமுறைதான் தாங்கள் நினைத்ததை அடைவதற்கான ஒரே வழி என்று, அவர்கள் ஆட்சிக்கு வந்த காலம் முதல் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காகவும் இனவாதத்தையும் யுத்த வெற்றிவாதத்தையுமே தென் இலங்கை பூராவும் விதைத்தார்கள். கோட்டா ஜனாதிபதியாகப் பதவியேற்கும் போதுகூட, அதனைத்தான் பிரதிபலித்தார். அதனால்தான் கூட்டமைப்பின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பைக் கிட்டத்தட்ட நிராகரித்து வந்திருந்தார்.

ஏற்கெனவே இரண்டுமுறை சந்திப்புக்கான நாள்கள் தீர்மானிக்கப்பட்டு, இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டன. இரத்து செய்யப்பட்டமைக்கான காரணங்களாக, நேரப்பிரச்சினை கூறப்பட்டாலும் கூட்டமைப்பு பேச விரும்பும் விடயங்களை அறிந்து கொண்டதும், அது தொடர்பில் பேசுவதற்கு தயாரில்லை என்ற நிலைப்பாட்டிலேயே கோட்டா சந்திப்புகளைத் தவிர்த்தார். ஆனால், இம்முறை பேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்திருக்கின்றமைக்கான காரணம், வெளிநாடுகளின் அழுத்தம் மற்றும் பொருளாதார நெருக்கடியாகும்.

ராஜபக்ஷர்கள் இன்றைக்கு ‘எதைத் தின்றால் பித்தம் தெளியும்’ எனும் கட்டத்தில் வந்து நிற்கிறார்கள். ஏனெனில், நாட்டின் பொருளாதார வீழ்ச்சி என்பது, தென் இலங்கையில் ராஜபக்ஷர்களுக்கு எதிரான கிளர்ச்சியை தோற்றுவித்திருக்கின்றது.

தற்போதுள்ள நிலை தொடர்ந்தால், ராஜபக்ஷர்களால் மக்கள் மத்தியில் செல்லவே முடியாமல் போய்விடும். அதனால், எப்படியாவது நிலைமைகளைச் சமாளித்தாக வேண்டும்; அதற்காக யாரின் காலைப்பிடிக்கவும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

அதன் ஒரு வெளிப்பாடுதான், கூட்டமைப்புடனான பேச்சுகளின் போது, புலம்பெயர் தமிழ் மக்களை இலங்கையில் முதலிடக்கோரும் ராஜபக்ஷர்களின் அழைப்பாகும்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகள், தனிநபர்கள் மீதான தடை என்பன நல்லாட்சிக் காலத்தில் நீக்கப்பட்டது. ஆனால், ராராஜபக்ஷர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மீதான தடையை விதித்தார்கள். அத்தோடு கண்காணிப்பு நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தினார்கள்.

ஆனால், இன்றைக்கு புலம்பெயர் தமிழ் மக்களை முதலிடக் கோருகிறார்கள். தமிழ் அமைப்புகள் மீதான தடையை நீக்காது புலம்பெயர் தமிழ் மக்கள், இலங்கையில் முதலிடுவதற்கு தயாராக மாட்டார்கள். ஏனெனில், ராஜபக்ஷர்களின் கடந்தகால வரலாறு அப்படியானது.

கூட்டமைப்புடனான பேச்சுகளின் போது, வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரதானப்படுத்திய முதலீடுகளை வெளிநாடுகளில் இருந்து ஈர்ப்பது தொடர்பிலான நடவடிக்கைகளுக்கு, விசேட ஏற்பாடுகளைச் செய்வது தொடர்பில், ராஜபக்ஷர்களால் வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கின்றது.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாகவும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு -கிழக்கு மாகாணங்களைப் பிரதானப்படுத்தி, நிதியங்களை அமைத்து செயற்படுவதற்கான அனுமதியை, வடக்கு மாகாண சபை உள்ளிட்ட பல தரப்புகளும் வேண்டி நின்றன. எனினும், அதனைராஜபக்ஷர்களோ அதன் பின்னர் வந்த நல்லாட்சிக்காரர்களோ அனுமதிக்கவில்லை.

ஆனால், இன்றைக்கு அவை பற்றியெல்லாம் பேசுவதற்கும் வாக்குறுதி அளிப்பதற்குமான கட்டத்தில் ராஜபக்ஷர்கள் வந்து நிற்கிறார்கள். இதுதான், ராஜபக்ஷர்களோடு பேசுவதற்கான முக்கிய தருணங்களில் ஒன்று!

இப்படியான நெருக்கடியான தருணத்தைப் பயன்படுத்தி கூட்டமைப்பு, எவ்வாறான அடைவுகளை அடையப்போகின்றது என்பதுதான் இப்போதைய கேள்வி. ஏனெனில், ராஜபக்ஷர்களில் நம்பிக்கை வைத்து பேச்சுவார்த்தைக்கு செல்லவில்லை. மாறாக, ஆட்சியில் யார் இருக்கிறார்களோ அவர்களோடு எமது பிரச்சினைகளைப் பேச வேண்டியது கூட்டமைப்பின் கடமை என்று சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் கூறியிருக்கிறார்கள்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்புகளில் கூட்டமைப்புத்தான் இன்றைக்கும் பிரதான தரப்பு. அது மக்களின் எதிர்பார்ப்புகளின் படி செயற்பட வேண்டியது அவசியம். அதுவும், கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எல்லாம் சமயோசிதமாகக் கையாளும் வல்லமையோடும் இருந்தாக வேண்டும்.

அதனைவிடுத்து, ‘எடுத்தோம் கவிழ்த்தோம்’ என்று விடயங்களை அணுக முடியாது. கூட்டமைப்புக்குள் டெலோ மாற்று முடிவை எடுத்து, பேச்சுவார்த்தையைப் புறக்கணித்து செயற்பட்ட போதிலும், கூட்டமைப்பு என்பது இன்னமும் சம்பந்தனின் தலைமைத்துவத்தின் கீழேயே இருக்கின்றது என்பதை அவர் தெளிவாகவே வெளிப்படுத்துகிறார். இராஜதந்திர சந்திப்புகளின் போதும் அதுவே பேணப்படுகின்றது.

ஜனாதிபதியின் அழைப்பில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டைத் தமிழ்த் தேசிய கட்சிகள் பல புறக்கணித்த போதும் கூட, அதிலும் கூட்டமைப்பு பங்குபற்றியது. அப்போதும் டெலோ தனித்து முடிவெடுத்துச் செயற்பட்டது.

ஆனால், கூட்டமைப்பின் தலைமை, ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையையோ, சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றியமையோ மக்களால் விமர்சிக்கப்படவில்லை. சில தமிழ்த் தேசிய கட்சிகள் ஊடாக, சந்திப்புகளை நடத்தி, எதிர்ப்பை வெளியிட்டதோடு அவை முடிவுக்கு வந்துவிட்டன.

தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் தரப்பாக கூட்டமைப்பையே இன்னமும் மக்கள் கருதுகிறார்கள்.

ஏனெனில், ‘எடுத்தேன் கவிழ்த்தேன்’ என்று விடயங்களை அணுகும் தரப்பாக தமிழ்த் தேசிய கட்சிகள் பலவும் தொடர்ச்சியாகத் தங்களை முன்னிறுத்தி வந்ததன் விளைவு அது.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் அண்மைய விஜயத்தின் போதும், அவர் சந்தித்த ஒரே தமிழ்த் தேசிய அரசியல் தரப்பு என்றால் அது கூட்டமைப்புத்தான். அதுவும் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான பேச்சுகளில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் கோட்டாவும் கூட்டமைப்பும் ஒரே மாதிரியான கருத்துகளை தெரிவித்திருப்பதாக கூறியிருப்பது முக்கியமான விடயமாகும்.

ஏனெனில், வழக்கமாக தமிழ்த் தரப்புகளுடன் பேச்சுகளில் ஈடுபடும் தென் இலங்கை ஆட்சியாளர்கள், அவற்றைப் பெரிதாகக் காண்பிப்பதில்லை. அதுபோல, பேச்சுகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் வெளிப்படுத்துவதில்லை. அவை அப்படியே மறக்கப்பட்டுவிடும்.

ஆனால், இம்முறை கூட்டமைப்புடன் பேசிய விடயங்கள் தொடர்பில், இந்திய வெளிவிவகார அமைச்சரிடமே கோட்டா விபரித்திருப்பது முக்கிய கட்டமாகும்.

இதற்கு ராஜபக்ஷர்கள் இன்றைக்கு சந்தித்து நிற்கும் நெருக்கடியே காரணமாகும். இந்த நெருக்கடி, எவ்வளவுக்கு வந்திருக்கின்றது என்றால், இந்திய வெளிவிகார அமைச்சர் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விஜயம் செய்து, நிலைமைகளைப் பார்வையிடும் அளவுக்கானது.

எந்தவொரு நாடும், இவ்வாறான நிலையொன்றைப் பேண விருப்பாது. ஆனால், இன்றைக்கு ராஜபக்ஷர்கள் இந்திய வெளிவிவகார அமைச்சர் எங்கு செல்ல முடியும், எங்கு செல்ல முடியாது என்று தீர்மானிக்கும் இடத்தில் இல்லை.

மாறாக, ‘கடன்’ என்கிற ஒற்றைச் சொல்வோடு காத்திருக்கின்றது. இவ்வாறான தருணத்தில் கூட்டமைப்பு தன்னுடைய கைகளை இன்னும் உயர்த்திக் கொண்டு, விடயங்களை அணுக வேண்டும். அப்போதுதான் தென் இலங்கையிடம் இருந்து பெற வேண்டிய விடயங்களைப் பெற முடியும். ஏனெனில், அரசியல் என்பது சந்தர்ப்பங்களை கையாளும் உத்தியாகும்.

கர்நாடகா

# மாணவிகளுக்கு பரீட்சை எழுத அனுமதி வழங்கிய

## ஏழு ஆசிரியர்கள் பணி நீக்கம்

கர்நாடகத்தில் ஹிஜாப் அணிந்த மாணவிகளைப் பரீட்சை எழுத அனுமதித்த 7 ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

பாடசாலை, பல்கலைக்கழகங்களில் முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணியக்கூடாது என மாநில அரசு விதித்த தடையை, கர்நாடக உயர்நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது.

இதையடுத்து பாடசாலை, பல்கலைக்கழகங்களில் ஹிஜாப் அணிந்த மாணவிகள், பரீட்சை மண்டபத்துக்கு உள்ளே அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில், தற்போது பாடசாலைகளில் பொதுத் தேர்வு நடைபெறும் நிலையில், ஹிஜாப் அணிந்த மாணவிகளுக்கு அனுமதி இல்லை என்ற மாநில கல்வித் துறையின் தடை நடைமுறையில் உள்ளது.



இதனால் முஸ்லிம் மாணவிகள் பலரும் பரீட்சை எழுதச் செல்லவில்லை. குறிப்பாக, உடுப்பியில் மட்டும் சுமார் 40க்கும் மேற்பட்ட மாணவிகள் பரீட்சை எழுதவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், ஹிஜாப் அணிந்த மாணவிகளை பரீட்சை எழுதுவதற்கு அனுமதித்த விவகாரத்தில், ஏழு ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.

சென்னை



# விபத்தில் நடிகர் ஜெயக்குமார் மரணம்

நடிகர் ஜெயக்குமார்சென்னையில் இடம்பெற்ற விபத்தொன்றில் மரணமடைந்த சம்பவம் திரையுலத்தினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை செங்குன்றத்தை சேர்ந்த ஜெயக்குமார், சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இருந்து வந்துள்ளார். பெரும் முயற்சிகளுக்கிடையே தனது 40 ஆவது வயதில் 'செங்குன்றம்' என்ற படத்தில் அவர் ஹீரோவாக நடித்து வந்தார். இதனிடையே நேற்று முன்தினம் (28) இரவு படப்பிடிப்பை முடித்து விட்டு, மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த நிலையில் செங்குன்றம் - திருவள்ளூர் நெடுஞ்சாலையில் அவரது மோட்டார் சைக்கிள், எதிரே வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியது.

இந்த விபத்தில் இருவருமே பலத்த காயமடைந்த நிலையில் அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டு, அருகில் இருந்த தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி ஜெயகுமார் உயிரிழந்துள்ளார். பெரும் கனவுகளோடு முதல் படத்தில் நடித்து வந்த ஜெயக்குமார், அப்படம் வெளிவருவதற்கு முன்பே மரணம் அடைந்தது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான்

### கர்ப்பிணி உயிரிழப்பு;

# தனது உயிரை மாய்த்த வைத்தியர்

பிரசவத்தின் போது கர்ப்பிணி உயிரிழந்ததால் அவருக்கு சிகிச்சை அளித்த வைத்தியர் தூக்கிட்டு தற்கொலை செய்த சம்பவம் ராஜஸ்தானில் இடம்பெற்றுள்ளது.

ராஜஸ்தானின் துசா மாவட்டத்தைச் சேர்ந்தவர் வைத்தியர் அர்ச்சனா. இவர் தனது கணவருடன் இணைந்து அப்பகுதியில் மருத்துவமனை நடத்தி வருகின்றார்.

இந்நிலையில், குறித்த வைத்தியசாலையில் கர்ப்பிணி ஒருவருக்கு அண்மையில் பிரசவம் பார்க்கப்பட்டது. எனினும், எதிர்பாராத விதமாக பிரசவத்தின் போது கர்ப்பிணி உயிரிழந்துவிட்டார்.

இதனால், ஆத்திரமடைந்த அந்தப் பெண்ணின் உறவினர்கள், அலட்சியமானதும் தவறான சிகிச்சை காரணமாகவும் தான் கர்ப்பிணி உயிரிழந்ததாக கூறி, மருத்துவமனையின் முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், கர்ப்பிணி பெண்ணுக்கு சிகிச்சையளித்த வைத்தியர் அர்ச்சனாவை கைது செய்ய வேண்டும் எனவும் முழக்கமிட்டனர்.

இதனையடுத்து, பிரசவத்தின் போது கர்ப்பிணி பெண் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, டொக்டர் அர்ச்சனா மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்நிலையில், மன அழுத்தத்துக்கு உள்ளான டொக்டர் அர்ச்சனா மருத்துவமனைக்கு மேல்மாடியில் உள்ள தனது வீட்டில் உள்ள அறையில் நேற்று (30) தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.



கேரளா

### திருச்சூர் கோவிலுக்கு

# தங்க யானை காணிக்கை

கேரளாவில் உள்ள பிரசித்தி பெற்ற கோவில்களில் திருச்சூர் வடக்குநாதன் கோவிலும் ஒன்றாகும்.

இக்கோவிலில் திருச்சூர் பூரம் விழா விமரிசையாக நடைபெறும். இதில் நூற்றுக்கணக்கான யானைகள் பங்கேற்கும்.

இதனைக் காண வெளி மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பக்தர்கள் படையெடுப்பது வழமை. இந்நிலையில் இக்கோவிலுக்கு வந்த பக்தர் ஒருவர், இங்கு நடைபெறும் யானைகள் ஊர்வலத்தைக் கண்டு வியப்படைந்ததோடு, குறித்த கோவிலுக்கு தங்க யானை ஒன்றையும் காணிக்கையாக வழங்கியுள்ளார்.

குறித்த தங்க யானை 800 கிராமில் செய்யப்பட்டுள்ளது. இது, தற்போது வடக்கு நாதன் கோவிலில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், குறித்த பக்தர், அக்கோவிலுக்கு ஒரு கோடி ரூபாய் காணிக்கையும் வழங்கியுள்ளார். ஆனால் தனது பெயர், விவரங்களை வெளியிட மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடலூர்



# காதலன் முன்னே காதலி பலாத்காரம்

கடலூரில் காதலன் கண்முன்னே இளம்பெண், மூவரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடலூர் அருகே நெல்லிக்குப்பம் பகுதியை சேர்ந்த 21 வயதான யுவதி, பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கையில் "எனது காதலன் தனியார் நிதி நிறுவனமொன்றில் பணிபுரிந்து வருகிறார். சம்பவ தினத்தன்று கிஷோர், சதீஷ், ஆரீப் ஆகிய மூவர், எனது காதலன் முன்னால், என்னைப் பாலியல் பலாத்காரம் செய்து, அதை வீடியோ எடுத்துள்ளார்கள். பின்னர், இப்படி நிகழ்ந்ததை வெளியே தெரிவித்தால், குறித்த வீடியோவை இணையத்தில் வெளியிட்டு விடுவதாக மிரட்டி வருகிறார்கள்" எனப் புகாரில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, மூவரையும் கைது செய்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகிறார்கள்.

# கேட்டீங்களா சங்கதிய?

நாட்டில் அமல்படுத்தப்படும் மின்வெட்டு நேரம், நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. காலை, பகல், இரவு பாராது, மின்வெட்டு அமல்படுத்தப்படுகின்றது. இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அறிவிப்பின் பிரகாரம், இன்னும் இரண்டு மணிநேரம் மின்வெட்டை அமல்படுத்துவதற்கு, இலங்கை மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அப்படியாயின், 12 மணிநேர மின்வெட்டை அமல்படுத்துவதற்கு மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில், நீண்ட நேரம் மின்வெட்டு ஏற்படுவதால் 3G மற்றும் 4G அலைவரிசை வலயமைப்புகள் செயலிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்படும் போது, அலைபேசி அலைவரிசை கோபுரங்களுக்கான மின்பிறப்பாக்கிக்கு டீசல் வழங்கப்படாமையால் அலைபேசி அலைவரிசை கோபுரங்களில் 3G மற்றும் 4G (interference reduction) அலைவரிசைகள் செயலிழந்த விடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.





## 'Let's Start From Garden'

அரசாங்கத்தின், தேசிய பசுமை தோட்டகலை திட்டத்தின் ஒரு கட்டமாக, பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியும் மற்றும் பசுமை விவசாய செயற்பாட்டு மையத் தலைவருமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் பங்கேற்பில் 'Let's Start From Garden' எனும் தலைப்பிலான பயிர் செய்கை திட்டம், இலங்கை இராணுவ தலைமையக வளாகத்தில், செவ்வாய்கிழமை (29) ஆரம்பித்து வைக்கப்பட்டது.



## வரிசையில் வரவேண்டாம்...

37,500 மெட்றிக் தொன் டீசலை ஏற்றிக்கொண்டு வரும் கப்பலில் இருந்து, திட்டமிட்டவாறு டீசலை இறக்க முடியாமையால், எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் கடுமையான டீசல் தட்டுப்பாடு நிலவுகின்றது.

ஆகையால், எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் டீசலுக்காக வரிசையில் நிற்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்ஹ தெரிவித்துள்ளார்.

அதன்பிரகாரம், இன்றைய தினம் (31) வரிசையில் நிற்க வேண்டாம் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார். அத்தியாவசிய தேவைக்காக தொடர்ச்சியாக டீசல் விநியோகிக்கப்படும் எனத் தெரிவித்த அவர், பெட்றோல் விநியோகிப்பதில் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லையென்றார்.

# சிறுகோளின் பெயர் 'கொழும்பு யுனிலங்கா'

கொழும்பு பல்கலைக்கழகத்தை கௌரவிக்கும் வகையில் சிறுகோள் ஒன்றிற்கு 'கொழும்பு யுனிலங்கா' என சர்வதேச வானியல் ஒன்றியம் (IAU), உத்தியோகபூர்வமாக பெயரிட்டுள்ளது.

அமெரிக்காவின் அரிசோனாவில் உள்ள தேசிய கிட் பீக் அவதானிப்பு மையத்தில் இருந்து 2000 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் மாணவர் கலாநிதி நலின் சமரசிங்க, சக வானியலாளர் டொக்டர் டொட் லொயர் ஆகியோர் இந்தச் சிறுகோளை கண்டுபிடித்தனர்.

அதன் சுற்றுப்பாதை நன்கு நிறுவப்பட்ட பிறகு, கண்டுபிடிப்பாளர்களுக்கு அதிகாரபூர்வ கண்டுபிடிப்பு அங்கிகாரம் சமீபத்தில் வழங்கப்பட்டது.

எண்ணிடப்பட்ட சிறுகோளைக் கண்டுபிடித்தவர்கள் கண்டிப்பான வழிகாட்டுதல்களைப் பின்பற்றி அதற்குப் பெயரிடலாம். இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சிறுகோளுக்கு 'கொழும்பு யுனிலங்கா' என்று பெயரிட்டது.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட விஞ்ஞானி ஒருவர், சிறுகோள் ஒன்றுக்கு பெயரிடுவதற்கான கண்டுபிடிப்புப் பெருமையைப் பெறுவது இதுவே முதல் தடவையாகும். உலகளாவிய ரீதியில் ஒரு சில பல்கலைக்கழகங்கள் மட்டுமே அவற்றின் பெயரில் சிறுகோள்களைக் கொண்டுள்ளன. இப்போது கொழும்பு பல்கலைக்கழகம் அந்தப் பிரத்தியேக லீக்கில் இணைந்துள்ளது.

Colombounilanka நமது சூரிய குடும்பத்தில் சிறுகோள் பெல்ட்டின் நடுப்பகுதியில் 1-2 கிலோ மீற்றர் அளவுள்ள சிறுகோள் ஆகும். சற்று நீள்வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றி, ஒரு முழுப் பயணத்தை மேற்கொள்ள கொழும்புயுனிலங்கா 4.2 வருடங்கள் எடுத்துக் கொள்கிறது. இந்தச் சிறுகோளை சக்தி வாய்ந்த தொலைநோக்கி மூலம் மட்டுமே பார்க்க முடியும்.

> **Colombounilanka சூரிய குடும்பத்தில் சிறுகோள் நடுப்பகுதியில் 1–2 கிலோ மீற்றர் அளவுள்ள சிறுகோள் ஆகும். சூரியனைச் சுற்றி, ஒரு முழுப் பயணத்தை மேற்கொள்ள கொழும்புயுனிலங்கா 4.2 வருடங்களை எடுக்கிறது**

பல்கலைக்கழகத்தின் உயர்கல்விக்கான பங்களிப்புகளை அங்கிகரிக்கும் வகையில், பல்கலைக்கழகத்தில் உள்ள தனது விரிவுரையாளர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும், இலங்கையிலுள்ள அடுத்த தலைமுறை மாணவர்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையிலும், அண்மையில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய கொழும்பு பல்கலைக்கழகத்தின் பெயரை இந்தச் சிறுகோளுக்குப் பெயரிட முடிவு செய்ததாக கலாநிதி சமரசிங்க கூறினார்.



### காலியிலிருந்து கொழும்பு வரை

## சிறுவர் பாதுகாப்பு யாத்திரை



சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை நிறைவுக்கு கொண்டு வரும் தேசிய திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஏப்ரல் முதலாம் திகதி காலியிலிருந்து கொழும்புக்கு யாத்திரையாக வருகை தரவுள்ளது. இலங்கையில் முதன் முறையாக 'சிறுவர் பாதுகாப்பு யாத்திரை' எனும் நாமத்தில் இந்தத் திட்டம் அமையவுள்ளது. சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்தும் அமைப்பு (Stop Child Cruelty Trust) மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஒன்றியம் (CPA) ஆகியன இணைந்து, ஏப்ரல் இரண்டாம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தை வந்தடையவுள்ளது.

கடந்த 18 மாத காலப்பகுதியில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்த 12 சிறுவர்களின் நினைவாக, ஏப்ரல் முதலாம் திகதி, 12 சவப் பெட்டிகளும் காலியிருந்து பேருவளை முதல் களுத்துறை ஊடாக கொழும்பு கோட்டையை வந்தடைந்து, ஏப்ரல் 2ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தை வந்தடையவுள்ளது.

இலங்கையின் முதலாவது சிறுவர் பாதுகாப்பு நலன்பேணல் தூதுவர்களான சாரங்க திசாசேகர, தினக்ஷி பிரியசாத், உமார சின்ஹவன்ச, ஹரித் விஜேரத்ன, ஆதித்யா வெலிவத்த, கலாநிதி விசாகேச சந்திரசேகரம், கலாகீர்த்தி நிரஞ்சனி சண்முகராஜா, அபிஷேகா பெர்னாண்டோ, ஒடாரா குணவர்தன ஆகியோர் இந்த யாத்திரையில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த நடவடிக்கையில் தம்மை ஈடுபடுத்த ஆர்வமுள்ளவர்கள் www.stopchildcruelty.com எனும் இணையத்தளத்தை பார்வையிட முடியும் என்பதுடன், Facebook பக்கத்தில் www.facebook.com/stopchildcruelty அல்லது info@stopchildcruelty.com எனும் மின்னஞ்சல் வாயிலாக தொடர்பை ஏற்படுத்தலாம்.

பாகிஸ்தான்


# கான் அரசு; கவிழும் அபாயம்

**பாகிஸ்தானில் பரபரப்பு**

பாகிஸ்தானின் பொருளாதார வீழ்ச்சிக்கு பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான அரசே காரணம் என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வந்தன.

குறிப்பாக இம்ரான்கான் அந்நாட்டின் 'பொருளாதாரம், வெளியுறவுக் கொள்கை போன்றவற்றில் மிகவும் தவறான முடிவுகளை எடுத்துள்ளதாகக் கூறி 'பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் நவாஸ் முஸ்லீம் லீக் கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 100 பேர் இம்ரான் கானுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானமொன்றை கொண்டு வரவேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

இதனையடுத்து, அந்நாட்டில் இம்ரான்கான் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது.



அந்தவகையில் இன்று (31) இது குறித்த விவாதம் நடைபெறவுள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து வரும் 3 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், பாகிஸ்தானில் பிரதமர் இம்ரான்கான் அரசுக்கு அளித்த ஆதரவை MQM (The Muttahida Qaumi Movement) கட்சி விலக்கிக் கொண்ட நிலையில், எதிர்க்கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு ஆதரவு அளிப்பதாக MQM கட்சி அறிவித்துள்ளது. இதன்காரணமாக இம்ரான்கான் அரசு பெரும்பான்மையை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக MQM கட்சியின் அறிவிப்பால் எதிர்க்கட்சிகளின் பலம் 177 ஆக அதிகரித்துள்ளதோடு, இம்ரான்கான் அரசின் பலம் 164 ஆக குறைந்துள்ளது. இதனால், பிரதமர் பதவியை விட்டு இம்ரான்கான் விலக வேண்டிய கட்டாயத்தில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐ. அமெரிக்கா



**2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்:**

## பைடனை முந்திய ட்ரம்ப்

ஐக்கிய அமெரிக்காவின் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஐ. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை முன்னாள் ஐ. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெல்லுவார் என புதிய கருத்துக்கணிப்பொன்று தெரிவித்துள்ளது.

தற்போது ஜனாதிபதித் தேர்தல் நடந்தால், 47 சதவீதமான அமெரிக்கர்களின் ஆதரவை முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் கொண்டிருப்பார் என்றும், ஜனாதிபதி பைடன் 41 சதவீதமான ஆதரவைக் கொண்டிருப்பார் எனக் கூறப்பட்டுள்ளது.

உக்ரேன்

**கிவ்விலிருந்து பின்வாங்கும் உறுதிமொழிக்கு மத்தியில்**

## உக்ரேனிய நகரங்கள் மீது ரஷ்யா தாக்குதல்

வட உக்ரேனிலுள்ள சுற்றிவளைக்கப்பட்ட நகரம் மீது ரஷ்யப் படைகள் நேற்றுக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. குறித்த நகரத்தில் தாக்குதல்களை குறைப்பதான உறுதிமொழியையடுத்தே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, மேற்கு உக்ரேனிலுள்ள தொழிற்சாலை வசதிகளையும் நேற்று முன்தினம் ரஷ்யப் படைகள் நேற்று முன்தினமிரவு தாக்கியதாக பிராந்திய ஆளுநரொருவர் தெரிவித்துள்ளார்.



வாஷிங்டன்



**அமெரிக்கர்களை உடனடியாக வெளியேற உத்தரவு...**

ரஷ்யாவில் இருக்கும் அமெரிக்கர்கள் உடனே அந்நாட்டில் இருந்து வெளியேற வேண்டுமென அமெரிக்க அரசு அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை பயண ஆலோசனை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் ரஷ்யப் படைகள் உக்ரேனில் போரில் ஈடுபட்டு வரும் சூழலில் ரஷ்யாவில் இருக்கும் அமெரிக்க குடிமக்களை ரஷ்ய அதிகாரிகள் துன்புறுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. இதனால் ரஷ்யாவுக்கு அமெரிக்க குடிமக்கள் பயணம் மேற்கொள்ள வேண்டாம். ரஷ்யாவில் இருக்கும் அமெரிக்கர்கள் தடுத்து நிறுத்தப்படலாம். எனவே அந்நாட்டில் இருந்து அமெரிக்காவுக்கு உடனடியாக வெளியேற வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

உக்ரேன்



## அதிரடி அறிவிப்பை வெளியிட்ட நேட்டோ

அடுத்த வாரம் புரஸ்ஸெல்ஸில் (Brussels ) நடைபெற உள்ள நேட்டோ கூட்டமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் உச்சி மாநாட்டில் பங்கேற்க உக்ரேனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், ஏப்ரல் மாதம் 6, 7ஆம் திகதிகளில் நேட்டோ பொதுச்செயலாளர் Jens Stoltenberg, தலைமையில் நேட்டோ உச்சி மாநாடு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அவுஸ்திரேலியா, பின்லாந்து, ஜார்ஜியா, ஜப்பான், நியூசிலாந்து, சுவீடன், கொரியா குடியரசு ஆகிய நாடுகளும் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளது.

மேலும் 'சில அமைச்சர்கள் வீடியோ அழைப்பு மூலம் கலந்து கொள்வார்கள்' என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரேன் மீதான ரஷ்யாவின் போர் தொடங்கியதில் இருந்து 30 நேட்டோ நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களால் கூட்டம் கூட்டப்படுவது இது 2 ஆவது முறையாகும்.

யேமன்

## தற்காலிக போர் நிறுத்தம்

யேமனில் சவுதி கூட்டுப் படைகள் தற்காலிகமாக போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளன.

இதுகுறித்து அரபு செய்தி நிறுவனங்கள், " இஸ்லாமியர்களின் புனித மாதமான ரமலான் மாதத்தில் அரசியல் பேச்சுக்களுக்கு வளமான சூழலை உருவாக்கவும், அமைதிக்கான முயற்சிகளைத் தொடங்கவும் யேமனில் தற்காலிக போர் நிறுத்தத்தை சவுதி கூட்டுப் படைகள் அறிவித்துள்ளன. இந்தப் போர் நிறுத்தம் யேமனில் அமைதி நிலவுவதற்காக அரசியல் ரீதியான பேச்சுவார்த்தையை ஊக்குவிக்கும் என்றும் சவுதி தெரிவித்துள்ளது.



## உலகக் கிண்ணத்தில் போலந்து

கட்டாரில் இவ்வாண்டு நடைபெறவுள்ள சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உலகக் கிண்ணத் தொடருக்கு போலந்து தகுதி பெற்றுள்ளது.

தமது நாட்டில் நேற்று (30) அதிகாலை நடைபெற்ற சுவீடனுடனான தகுதிப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்றே உலகக் கிண்ணத்துக்கு போலந்து தகுதி பெற்றுள்ளது.

போலந்து சார்பாக, றொபேர்ட் லெவன்டோஸ்கி, பியோத்தர் ஸிலென்ஸ்கி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், தம் நாட்டில் நடைபெற்ற வட மசிடோனியாவுடனான தகுதிப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்ற போர்த்துக்கல்லும் உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளது. போர்த்துக்கல் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் புரூனோ பெர்ணாண்டஸ் பெற்றிருந்தார்.



**முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்**

## பாகிஸ்தானை வென்ற அவுஸ்திரேலியா

பாகிஸ்தானுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

அவுஸ்திரேலியா: 313/7 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ட்ரெவிஸ் ஹெட் 101 (72), பென் மக்டர்மொட் 55 (70), கமரொன் கிறீன் ஆ.இ 40 (30) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹரிஸ் றாவ்ப் 2/44, ஸஹிட் மஹ்மூட் 2/59, குஷ்டில் ஷா 1/50, இப்திஹார் அஹ்மட் 1/36)

பாகிஸ்தான்: 225/10 (45.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: இமாம்-உல்-ஹக் 103 (96), பாபர் அஸாம் 57 (72) ஓட்டங்கள். பந்துவீச்சு: அடம் ஸாம்பா 4/38, மிற்செல் ஸ்வப்ஸன் 2/53, ட்ரெவிஸ் ஹெட் 2/35, நாதன் எலிஸ் 1/36, ஷோன் அபொட் 1/36)

போட்டியின் நாயகன்: ட்ரெவிஸ் ஹெட்

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

## சமநிலையில் ஜேர்மனி – நெதர்லாந்து போட்டி

நெதர்லாந்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற அவ்வணிக்கும், ஜேர்மனிக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

ஜேர்மனி சார்பாகப் பெறப்பட்ட கோலை தோமஸ் மல்லர் பெற்றதோடு, நெதர்லாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை ஸ்டீவன் பேர்ஜ்விஜ்ன் பெற்றிருந்தார்.



**றிஷாத் சம்பியன் கிண்ணத் தொடர்:**

## சம்பியனானது மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம்

■ ஏ.எல்.எம். ஷினாஸ்

மருதமுனை யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையோடு அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட லீக் 2019ஆம் ஆண்டு நடத்திவந்த முன்னாள் அமைச்சர் றிஷாத் பதியுதீன் அழைப்பு வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் மருதமுனை மசூர் மௌலானா அண்மையில் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டிக்கு தெரிவான மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மருதமுனை எவரெடி விளையாட்டுக் கழகம் விளையாடியது இந்த போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் றிஷாத் சம்பியன் கிண்ணத்தை மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் தம்வசப்படுத்திக் கொண்டது.

சம்பியன் கிண்ணத்தை வென்ற ஒலிம்பிக் விளையாட்டு கழகத்தினருக்கு 50,000 ரூபாய் பணப்பரிசும், சம்பியன் வெற்றிக் கிண்ணமும் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினருமான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றிசாத் பதியுதீன் வழங்கிவைத்தார்.

இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட மருதமுனை எவரெடி விளையாட்டு கழகத்தினருக்கு 25,000 ரூபாய் பணப்பரிசும் வெற்றிக் கிண்ணம் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டது.

இத்தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்துக்கும், கிறீன் மெக்ஸ் கழகத்திற்கும் இடையில் கடந்த 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் 4 - 0 என்ற கோல் கணக்கில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் மருதமுனை எவரெடி விளையாட்டு கழகமும் கல்முனை லக்கிஸ்டார் விளையாட்டுக் கழகமும் விளையாடியது. இதில் 2 - 2 என்ற கோல் கணக்கில் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கடைசி 17 நிமிடங்கள் எஞ்சி இருக்கும் நேரத்தில் சீரற்ற காலநிலை காரணமாக போட்டி இடைநிறுத்தப்பட்டது.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை, 31 மார்ச் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.